தமிழ்ப் பொழில்.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௮௮	மலர்
௩௩	ஏவிளம்பி, வைகாசி 1957 மே, சூன்.	௨

அறங்கள்.

[டாக்டர் அ. சிதம்பரநாதன், எம். ஏ.,]

அறம், பொருள், இன்பம் என்ற மூன்றும் பேசப்படும்பொழுது அறத்திற்கு முதல் இடம் கொடுக்கப்பட்டு வருதல் கண்கூடு. பொருளும், இன்பமும் அறத்தின் வழியே தோற்றுவன என்ற கருத்து பழங்காலந்தொட்டு நம் நாட்டில் இருந்து வருகிறது. புறநானூற்றுப் பாடலாகக் காணப்படுகின்ற ஒன்றினுள், சேர மன்னர், பாண்டிய மன்னர் ஆகிய இருவருடைய குடைகள் பின்னும், சோழ மன்னருடைய குடை முன்னும் வருகின்ற காட்சியைத் தெரிவிக்கக் கருதிய புலவர் ஒருவர் பொருளும் இன்பமும் அறத்தின் பின்னர் அமைந்திருக்கின்ற செய்தியைக் குறிப்பிட்டார் என அறிகிறோம். அற வழியிலே பொருள் ஈட்டி அறத்தாற்றிலே இன்பம் துய்க்க வேண்டும் என்பது தொன்றுதொட்டு வரும் கருத்து.

"அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து
தீதின்றி வந்த பொருள்"

என்றார் திருவள்ளுவர். குற்றம் இல்லாத வழியில் ஈட்டும் பொருள் அறத்தைத் தரும், இன்பத்தையும் தரும் என்பது அவரால் வற்புறுத்தப்பட்டது. அற வழியால் விளைவதே இன்பம்; பிற வழிகளால் வருவது துன்பம் என்பதும் திருவள்ளுவர் கருத்து. அதனால்,

"அறத்தான் வருவதே இன்பம்; மற்றெல்லாம்
புறத்த புகழும் இல"

என்றார் திருவள்ளுவர். இக்காரணங்களால், அறத்திற்கு முதல் இடம் கொடுக்கப்பட்டு, பொருள் இன்பம் ஆகியவற்றிற்கு மற்ற இடங்கள் கொடுக்கப்பட்டன என்பது அறியப்படும். அதனால்தான், "கோவூர் கிழார்"

"சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல
இருகுடை பின்பட ஓங்கிய ஒருகுடை
உருகெழு மதியின் நிவந்துசேண் விளங்க"

என்று கூறினர்.

அறம் என்பதை ஈதல் அல்லது கொடுத்தல் என்ற பொருளிற் பொதுவாக வழங்கினர் என்றாலும், இன்னாருக்கு இன்ன அளவு, இன்னவர்க்கு இன்ன அளவு என்றவாறு வரையறை செய்து கொண்டு வாழ்கின்ற முறையைக் காட்டுவதுதான் அறம் என்பது அச்சொல்லின் அடிப் பொருளால் விளங்கும். அறுக்கப்படுவது அறம்; அல்லது வரையறை செய்யப்படுவதொன்று என்ற கருத்து புலப்படும். அறம் என்றாலே பகுத்து உண்பது என்பது

" அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது "

என்ற குறளால் விளங்கும். திருக்குறளுக்கு உரை வகுத்தவர்கள் " அறன் " என்பதற்குப் பகுத்து உண்டல், அதாவது பிறர்க்கு எல்லாம் பங்கிட்டுக்கொண்டு உண்ணுதல் என்று எழுதினார்கள். அறம் என்ற சொல்லுக்குக் கடமை என்ற பொருளும் உண்டு.

" அறனோக்கி ஆற்றுங்கொல் வையம் புறனோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை "

என்ற திருக்குறளில் வரும் அறன் என்பதற்குக் கடமை என்ற பொருள் உண்டு. ஒருவன் முன்னே அவனைப் புகழ்ந்துரைத்து அவன் பின்னே இல்லாததும் பொல்லாததும் சொல்லித் தூற்று பவரைச் சுமக்கின்ற பெரும் பாரத்தை உலகம் தாங்கவேண்டும் என்ற கடமையால் அன்றோ தாங்குகின்றது என இப்பாட்டினால் விளக்குகின்றார் வள்ளுவர். எனவே, அறம் என்ற சொல்லுக்குக் கடமை என்பது பொருள் என்பது பெறப்படும். சான்றோராயி னோர்க்கு நல்லன எல்லாம் கடன்; அல்லன எல்லாம் கடமை அல்லாதவை.

சில வேளைகளிற் பிறர்க்கு நல்லன செய்ய முடியாவிட்டாலும் அல்லது செய்தலையாவது ஒருவர் தவிர்த்தல் வேண்டும். " நல்லன செய்தல் ஆற்றீராயின் அல்லது செய்தல் ஓம்புமின் " என்றார் அறி ஞர் ஒருவர். நல்லன செய்தல் என்றால் பொருள்களைக்கொண்டே நல்லன செய்தல் என்பது கருத்தாகாது. உடம்பினாலும், உரை யாலும், உள்ளத்தாலும் பிறர்க்கு நல்லன செய்தல் இயலும். அவற் றையெல்லாம் செய்க என்பதே கருத்து. அதனால், உடலால் செய் யப்படும் அறங்கள் உள்ளத்தால் செய்யப்படும் அறங்கள், உரை யால் செய்யப்படும் அறங்கள் என்று இவை முத்திறப்படும். ஒருவர் நல்ல செல்வாக்கு உடையவராய் இருந்தால் தம் சொல் செல்லு கின்ற இடத்தில் அதனைப் பயன்படுத்தி அதனால் நன்மை செய்தலும் விரும்பத்தக்கதொன்று.

அறங்களை முப்பத்திரண்டு வகையென வகுத்தவர்கள் அவற் றில் ஒவ்வொன்றாக ஆதுலர் சாலையையும் ஓதுவார்க் குணவையும் அறுவகைச் சமயத்தவர்க்கு உண்டியையும் சிறைச் சோற்றினையும் கூறியுள்ளார்கள். எனவே, உண்டிக்குக் கொடுக்கப்பட்ட சிறந்த இடம் அறியப்படும்.

அறங்களைத் தொடர்புடையோர்க்குச் செய்வன என்றும், தொடர்பு இல்லாதார்மாட்டு அல்லது பிற உயிர்கள் மாட்டுச் செய்வன என்றும், கடவுளுக்குச் செய்வன என்றும் மூன்று வகையாகப் பிரித்தலும் ஒரு மரபு. எவ்வாறெனினும், அறத்திற்கு அடிப்படை இச்சொல் என்பதும், அது வெளிப்படும் வகை ஈகை என்பதும், அன்பொடு இயைந்தே அது செய்யப்படவேண்டும் என்பதும், வன்சொல் நீக்கி இயற்றப்படவேண்டும் என்பதும், வாய்மை இன்றி அது தழைக்காது என்பதும் ஆன்றோர் கருத்து.

" இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக
வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய் "

என்பது அறநெறிச் சாரம்.

அறம் என்பதற்கு விட்டுக்கொடுத்தல் என்ற பொருளும் உண்டு. ஒருவருடைய உரிமைகளை அல்லது ஒருவருடைய சொத்துக்களைச் சமயத்தில் பிறருக்கு விட்டுக்கொடுத்தல் என்பதும் அறம் எனப்படும். அதனால்தான், இக்காலத்தில் தோன்றிய நிலக்கொடை இயக்கமும் ஒரு பேரறமாக மதிக்கப்பட்டு வருகிறது. தன்னைப்போலப் பிறரை ஒருவன் மதித்தல் வேண்டும் என்ற அடிப்படையில் இவ்வறம் எழுகின்றது. தனக்கு இன்னாதன பிறர்க்கு இன்னாமை பயக்கும் என்பதை ஒருவன் அறிந்திருப்பானானால், பிறர் எவர்க்கும் தீமைசெய்யச் சிந்தையாலும் எண்ணான். திருவள்ளுவரும்

" இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல் "

என்றார். பக்கத்து வீட்டாரைத் தன்னைப்போல் மதித்து அவர்க்கு அன்பு காட்டவேண்டும் என்ற ஆங்கில மொழியில் அமைந்த கருத்தும் உன்னத்தக்கது. அயல் வீட்டாரிடத்தில் ஒருவன் அன்பு செலுத்துதல் வேண்டும் என்றால், ஒருவன் தன் இடத்தில் தானே முதலில் அன்புடையவனாக இருத்தல் வேண்டும் என்பது பெறப்படும். தன்னை நம்பினால்தான் பிறரை நேசிக்க ஒருவனால் இயலும். தன்னிடத்திலிருந்து சுற்றத்தார் இடத்து அன்பு வளருகிறது; சுற்றத்தார் இடத்தில் இருந்து ஊரார் இடத்துப் பெருகி வளருகிறது; ஊராரிடம் இருந்து நாட்டார் இடத்தில், நாட்டார் இடத்தில் இருந்து தேயத்தின் இடத்தில், தேயத்தின் இடத்தில் இருந்து உலகத்தின் இடத்தில் இவ்வன்பு வளருகிறது. எனவே, ஒன்றோடொன்று தொடர்புடையனவாய் இவை சங்கிலிப் பிணைப்பாக நிற்கின்ற நிலை அறியப்படும். அதனால், தன்னை மறந்து, தன் இனத்தவரையும் ஊராரையும் மறந்து, பிறர்க்கு அறம் செய்யவேண்டும் என்ற கருத்து இயற்கைக்கு வேறுபட்டதாக இருத்தலை விரைவில் அறிந்துகொள்ளுதல் இயலும்.

அறம் என்பது மனத்தில் மாசில்லாமை என்று கூறுதல் தகும்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற"

என்றார் திருவள்ளுவர். ஒருவர் மனத்திலே தூய எண்ணங்களை எண்ணாதவராய் இருந்தால், அவருடைய செய்கையறம் பயன் விளைக்காது என்பது கருத்து. பொருள்கொண்டு இயற்றப்படும் பல செயல்களால் அறம் எனச் சொல்லத்தக்கவை இயற்றப்பட்டாலும், புற வேடங்களால் அறம் எனக் கருதப்படுவது இயற்றப்பட்டாலும், மனத்தில் மாசு உண்டு என்றால், குற்றம் உண்டு என்றால், பழி பாவத்திற்கு இரங்கும் பண்பு இல்லை என்றால், அவ்வேடங்களால் பயன் இல்லை என்பதே கருத்து. ஒருவன் பொருள் துணையாக அறங்கள் செய்யவில்லை என்றாலும், அறம் என்பதன் பெயரைக்கூடச் சொல்லவில்லை என்றாலும், புறத்தே அணியத்தக்க சமயச் சின்னங்கள் முதலானவற்றை அணிந்துகொள்ளவில்லை என்றாலும், அவன் மனத்தில் மாசு மறு அற்றவனாய் இருப்பின், அவனே சிறந்த அறம் செய்தவனாக உண்மையில் மதிக்கப்படவேண்டும் என்பது திருவள்ளுவர் கருத்து. அதனால்தான் மனத்துக்கண் மாசு அற்றவராக ஒருவர் வாழ்கின்ற அளவே அறமாவது; மற்றவை எல்லாம் ஆடம்பரத்தோடு பிறர் அறியுமாறு செய்யப்பட்டவை என்றார் அவர். ஒருவன் ஒரு விரதத்தைக் காக்கின்றான் என்றால், ஒருவன் பலர்க்குக் கொடுக்கின்றான் என்றால், அவன் அவ்விரதத்தைப் பிறர் அறியாமல் தானே இயற்ற முற்படுதலும், விளம்பரம் இன்றிக் கொடுத்தலும் தக்கன என்பது ஏசுநாதர் கருத்து. பட்டினி நோன்பு ஒருவர் இயற்றுகின்றார் என்றால், ஒருவர் நிறையப் பணம் கொடுக்கின்றார் என்றால், அவற்றை விளம்பரப்படுத்திச் செய்தலைக் காட்டிலும், பிறர் எவரும் அறியாவாறு செய்தல் நல்லது என்றார் அவர். பட்டினியால் விளைந்த வாட்டத்தை முகங் காட்டாதவாறு தோற்றத்தை அமைத்துக்கொண்டு நோன்பு நோற்றல் நல்லது என்றார் அவர். தன் வலதுகை கொடுப்பது இடது கைக்குக்கூடத் தெரியக்கூடாது என்பது சொல்லப்பட்டது. இவ்வாறு கூறியதன் நோக்கம் ஒருவர் கொடுக்கின்றார் என்ற காரணத்தினால் அடைகின்ற புகழை அவர் பெற்றுவிட்டதால், அவர் கொடையின் பயனை இவ்வுலகத்தில் தானே பெற்றுவிடுதல் கூடும்; பிறகு ஒருமுறை கடவுளால் அதற்காக எனப் பாராட்டப்படவேண்டிய அவசியம் இல்லை என்பதாகும்.

புது வேடங்கள் என்று சொல்லப்படுபவை பெரும்பாலும் சமயச் சின்னங்களே. ஒருவருடைய தோற்றத்தைக்கொண்டே அவர் இந்தச் சமயத்தினர் அல்லது இந்த மதத்தினர் எனக் கூறுதற்கு உதவும் அடையாளங்கள் சமயச் சின்னங்கள் எனப்படும். திருநீறு அணிகிறவர் சைவர் என்றும், திருமண்காப்பு இடுகிறவர் வைணவர் என்றும் புறத் தோற்றத்தால் அறியப்படுவர். இந்த இந்தச் சமயத்தில் பிறந்தவர்கள் அல்லது இந்த இந்தச் சமயத்தைத் தழுவியவர்கள் இந்த இந்த அடையாளங்களை மேற்கொள்வதில் தவறு இல்லை. ஆனால், இந்த அடையாளங்களைக் கொள்ளாத காரணத்

தால் ஒருவர் ஒழுக்கம் குன்றியவர் என்றோ, கடவுளை வழிபடும் பான்மையர் அல்லர் என்றோ கருதல் ஒவ்வாது. ஒருவர்க்கு அகத்திலே தூய்மை உண்டாவது வாய்மையால் ஆகும். புறத்திலே அமையும் தூய்மையே நீரினால் ஏற்படுவது. இதனை மக்கள் சிந்தித்தல் வேண்டும். ஒரு நாளில் மூன்றுமுறை குளிக்காதவரும், திருநீறு அணியாதவரும், திருமண்காப்பு இடாதவரும் கடவுளுக்குப் புறம்பானவர் என்ற கருத்து தவறுபட்ட கருத்தாக இருத்தல்கூடும் என்ற எண்ணம் நம் மக்களில் பலருக்கு உண்டாதல் இல்லை. கடவுள் வழிபாட்டிற்குத் துணையாக, சார்பாகச் சமயச் சின்னங்கள் இருக்கின்றன என்று வேண்டுமானால் ஒருவர் கூறுதல் கூடும். ஆயினும், சமயச் சின்னங்கள் வேறு, சமயம் வேறு என்பது அறியப்படுதல் வேண்டும். ஒருவர் உடுத்துகின்ற விதமும், உண்ணுகின்ற விதமும், குடிக்கின்ற விதமும் சமூகச் செய்திகளே ஒழியச் சமயச் செய்திகள் அல்ல என்ற எண்ணம் நன்றாக நாட்டிற் பரவவில்லை. சமயம் என்பது மனிதனுக்கும் கடவுளுக்கும் ஏற்பட்ட ஒரு தொடர்பினைப் பற்றியதாகும். சமயத்திற்குரிய ஆங்கிலச் சொல்லுக்கு விளக்கம் தருகின்ற பெரியவர்கள் மனத்தை இறைவனோடு இயைப்பது சமயம் என்றும், மன மாசுகள் நீங்கப்பெற்ற ஒருவன் இப்பிறவியில் தானே மறுபிறப்பெய்துதல் சமயம் என்றும் கூறுகின்றார்கள். இப்பிறவியிலேயே மறு பிறப்பு எய்துதல் என்றால், ஒருவன் உள்ளத்தில் உள்ள தீமைகளை எல்லாம் அகற்றிவிட்டு அவனைத் தூய்மைப்படுத்திக்கொண்டு புது மனிதன் ஆகின்றான் என்பது பொருள் என்று டாக்டர் எஸ். இராதாகிருட்டினன் கூறியுள்ளார். இந்த நிலைதான் ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டாதல் வேண்டும். உண்டானபிறகுதான் ஒருவன் ஒரு சமயம் சார்ந்தவன் என்று சொல்லுதல் பொருந்தும். அதுவரை அவன் தழுவுகின்ற சமயம் என்று சொல்லப்படுவது உண்மைச் சமயம் அன்று; சமுதாய வழக்காக இருக்கலாம்.

ஆயினும் புறவேடம் கொள்ளக்கூடியவர்கள் உண்மையில் அந்நெறி நிற்பவர்கள் எனில், அவர்க்கு அதனாலேயும் ஒரு நன்மை உண்டு. "வேடநெறி நில்லாதோர் வேடம் பூண்டு என்பயன்" என்றவரே "வேடநெறி நிற்பார் வேடம் மெய்வேடமே" என்றார். எனவே, புறவேடம் புனைபவரை, சமயச் சின்னங்கள் அணிபவரைக் கண்டால் ஒருவர் குறைகூறாது இருத்தலே விரும்பத் தக்கதாகும். புறவேடம் தாங்கியவர்கள் சிலர் அகத்தே அஞ்சத்தக்க பெருஞ் சழக்கராய் வன்கண்ணராய் வாழ்கிறார்கள் என்ற ஒரே காரணத்தால், அவ்வேடம் தாங்குபவர் அனைவரையும் குறைகூறுதல் பொருந்தாது. அதே காலத்தில் சமயச் சின்னங்களை அணிகின்றவர்க்கு உள்ள பெரும் பொறுப்பினையும் அவர்கள் உணர்தல் வேண்டும். திருநீறு, திருமண்காப்பு இடுபவருடைய வாழ்க்கையை உலக மக்கள் ஆய்ந்து பார்க்கிறார்கள் என்ற எண்ணம் அவர்க்குச் சிறிதாவது உண்டு என்றால், அவர்கள் தம்முடைய பல்வேறு செயல்களை ஒழுங்காக வகுத்து அமைத்துக்கொள்வர் என்பதில் ஐயம் இல்லை. புறவேடம் தாங்கிக்

கோயில் வழிபாடு மாத்திரம் செய்துவருகின்ற காரணத்தால், ஒருவர் உயர்ந்துவிடுதல் இல்லை என்ற கருத்து வற்புறுத்தப்படவேண்டும். கோயில் வழிபாட்டில் ஒருவர் ஈடுபடும் நேரம் ஒரு நாளில் அரை நாழிகையோ கால் நாழிகையோ ஆகும். கோயிலுக்குப் புறம்பாகவும் கடவுள் உள்ளார் என்பதை மதித்து ஒருவர் நடக்கின்றாரா என ஓர்ந்து உடன் உணரும் ஆற்றல் படைத்தவர் கடவுள். அதனால் கோயிலுக்கு வெளியே உள்ள இருபத்துமூன்று மணி நேரங்களில் ஒருவர் நினைவிலும் கனவிலுமாக எவ்வாறு வாழ்கின்றார் என்பது அவர் அறியமுடியாததொன்றன்று. அந்த வாழ்க்கையை மதிப்பிட்டுக் கடவுள் ஒருவர்க்கு நல்லதோ அல்லதோ செய்வார் என்ற நம்பிக்கை பெருகுதல் வேண்டும். அதனால்தான் திருவள்ளுவர் "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்" என்றார்.

கல்வி கற்றவர்களின் கடமைகளில் ஒன்று இறைவனை வழிபடுதல் என்பது. இறைவனுடைய நற்றாளைத் தொழாமல் இருப்பாராறால் ஒருவருடைய கல்வியாலான பயன் யாது என்று திருவள்ளுவர் கேட்டார்.

"கற்றதனால் ஆய பயன் என்கொல், வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

என்பது கடவுள் வாழ்த்து அதிகாரத்திற் காணப்படுகிறது. கடவுளைத் தொழுதல் என்றால், மூவாத சாவாத யாவர்க்கும் மேலான ஒரு பரம்பொருளைத் தொழுதல் என்பது கருத்து. தம்மால் வழிபடப்படும் கடவுளே கடவுள், பிற எல்லாம் கடவுள் அல்ல என்பதுபோலச் சிலர் கருதுகின்ற கருத்துப் பொருந்தாது. ஒவ்வொரு சமயத்தினரும் தம்மால் தம்மால் வணங்கப்படும் கடவுளே தக்க கடவுள் என்றும், மற்ற கடவுளரை வழிபடுகிறவர்கள் உய்வே அடையார் என்றும் கருதுகிறார்கள். அக்கருத்து தவறுடைத்து. ஓர் ஊரும் ஒரு பெயரும் ஓர் உருவமும் ஒரு நிறமும் கூறவொண்ணாத முழுமுதல் குறித்த ஒரு சமயத்தார்க்கே உரியராகிவிட்டார் என்று கொள்ளுகின்ற கருத்து தவறுபட்டதே என்பது இக்காலப் பேரறிஞர்களுக்கு ஒப்ப முடிந்தது. கடவுளை முற்ற முடியக் கண்டுகொள்ளமாட்டாமல் முற்றமுடிய அறிந்துகொள்ளமாட்டாமல் அறிந்த அறிந்த ஒவ்வொருவர் அளவுக்கேற்ப ஒவ்வொரு சமயத் தலைவரும் கடவுட் பண்பினை விளக்கிப்போயுள்ளனர். நம் எதிரே மணம் உடைய மலர் மாலை ஒன்று இருப்பதாக வைத்துக்கொள்வோம். அதன் மணத்தை மாத்திரம் மூக்கு முகருகிறது; அதன் நிறத்தை மாத்திரம் கண்கள் அறிகின்றன. அதனுடைய மெல்லியலை மாத்திரம் உடம்பு உணர்கிறது. மாலை ஒன்றேயானாலும், நுகருகின்ற பொறிகளின் இயல்புக்கு ஏற்ப ஒரோ ஒரு புலன்தான் ஒவ்வொரு பொறிக்கும் ஏற்படுகிறது. அதுபோலக் கடவுள் ஒருவரேயானாலும், பற்றுபவர்திறத்திற்கு ஏற்ப ஒரோஒரு பெற்றிதான் ஒவ்வொரு ஞானிக்கும் புலனாகிறது. இந்த ஞானிக்கு மற்ற சமயத்தாரைவிட அதிகமாகக் கடவுளை உணரும் திறம் இருந்தது என்று சொல்லுவதன் காரணமாகத்தான் வாதமும் பிடிவாதமும், கலாமும், பூசலும் உண்டாகின்றன. யாவர்க்

கும் மேலாம் ஒருவரான முழுமுதலை எவ்வேடத்திலும் வழிபடலாம், எவ்விதத்திலும் வழிபடலாம், புறத்தேயும் வழிபடலாம், அகத்தேயும் வழிபடலாம் என்ற பரந்த நோக்கம் மக்களிடம் பெருகுதல் வேண்டும். மரத்தாற் செய்யப்பட்ட ஒரு யானையைப் பார்ப்பவர்க்கு அது மரமாகவும் இருத்தல் கூடும், யானையாகவும் இருத்தல் கூடும். பார்க்கின்றவர்களின் பார்வைக்கேற்ப மரக்காட்சியில் யானை மறைந்துவிடுதலும், யானைக் காட்சியில் மரம் மறைந்துவிடுதலும் உண்டு. சலவைக் கல்லினுலான ஒரு நல்ல உருவத்தை நோக்கு கின்ற ஒருவர் கல் உணர்ச்சியினின்று விடுபட்டு உருவ அழகிலேயே ஈடுபட்டு இருப்பர். அதுபோல உருவங்களை வழிபடும்பொழுது கல் என்றும், செம்பென்றும், மண் என்றும் கருதாமல், அவற்றிற்கு அப்பாற்பட்டு நிற்கும் பேரொளியின்கண்ணே நம் மனம் செல்லுதல் வேண்டும். இந்தப் பழக்கம் கைகூடுதற்கு உருவ வழிபாடு சாதனமே அல்லாது முடிவன்று. இதனை நன்கு உணருவோமானுல் அரன் அதிகம் என்றும், அரி உயர்வு என்றும், அயன் நயமுடையன் என்றும் கூறமாட்டோம். பசுக்கள் வெவ்வேறு நிறம் உடையன வானுலும், அவை கறக்கும் பால் வெண்மை நிறமே உடையதுபோல, பல்வேறு சமயங்கள் சொல்லும் கடவுளர் பல்வேறு உருவினரானுலும், முடிவில் கடவுள் ஒரே இயல்பு உடையவராக இருப்பர் என்பது நாம் கேட்டறிந்தது ஒன்றன்ரே? விறகுகள் வெவ்வேறு விதத்தின வாக இருந்தாலும், அவற்றினின்று எழுந்து எரியும் தீ ஒரே வகையாக இருத்தல் போலப் பல்வேறு சமயங்கள் கூறிய கடவுள் பலவிதமாக இருந்தாலும் இறுதியில் உறுதியாகக் கடவுள் ஒருவிதமாக இருப்பர் என்பதில் ஐயம் இல்லை எனக்கூறப்படும் கருத்து பலர் அறிந்ததே. அதனுல், இக்கடவுளை வழிபடுதலால் நாம் பெரியோம் என்ற செருக்குக் கொள்ளாமல், அக்கடவுளை வழிபடுதலால் அவர் இழிந்தவர் என இகழ்ந்துரையாமல், அவரவர் வழிபடும் கடவுள் காரணமாக அவரவர்க்கு உய்தி உண்டு என்ற பரந்துபட்ட எண்ணத்தோடு நாம் செயல் ஆற்றுவதே. வழிபடுவதே இக்காலத்தில் விரும்பப்படுவதாகும். இம்முறையில் வழிபாடு செய்யப்படுவது ஓர் அறமாகிறது.

பொருள்கொண்டு அறங்கள் இயற்றப்படுகிற பொழுது அப்பொருளின் பயனைப் பெறுபவர்கள் பொருள் அற்றவராய் வறியவராய் இருப்பின், அவ்வறம் விழுமியதாக மதிக்கப்படும். வறியவர்களுக்குக் கொடுப்பதே கொடை எனப்படும். மற்றவை எல்லாம் ஒன்று கொடுத்து மற்ருென்று பெறும் பரிவர்த்தனை என்று சொல்லத்தகும் என்பது திருவள்ளுவர் கருத்து.

> ''வறியார்க்குஒன்று ஈவதே ஈகை; மற்றெல்லாம்
> குறியெதிர்ப்பை நீர துடைத்து''

என்ருர் திருவள்ளுவர். ஆய் என்ற வள்ளலைப்பற்றிப் பேசிய ஓடைகிழார் என்னும் புலவர், "எமக்கு ஈவோர் பிறர்க்கு ஈவோர், பிறர்க்கு ஈவோர் தமக்கு ஈப" என்ருர். ஓடை கிழாருக்கும் அவருடைய சுற்றத்தாருக்கும் கொடுக்கிறவர்களே பிறர்க்குக் கொடுத்தவர்கள் என்று அவர் சொன்னதன் கருத்து வறியவராகிய அவர்க்கும், வறிய

வராகிய அவருடைய சுற்றத்தார்க்கும் கொடுக்கிறவர்கள் தாம் உண்மையில் கொடையாளர்கள் என்பதாகும். வறியவரல்லாத பிறருக்குக் கொடுக்கிறவர்கள், செல்வர்களுக்கே யாதானும் ஒரு காரணத்தால் கொடுக்கிறவர்கள், மறுபயன் கருதிக் கொடுக்கிறவர்கள் என்பதால் தங்கள் தங்களுக்கே கொடுத்துக்கொண்டவர்கள் ஆவர் என்பது அவர் கருத்து. இவ்வாறு இயற்றப்படும் ஈகை, ஈகை ஆகாது, அறமாகாது என்பது அவர் கருத்து.

கொடுக்கும்பொழுது இன்ன சாதியார் இன்ன இனத்தவர் என்ற நோக்கத்தால் அல்லாமல், பொதுவாக இதனையின்றி வாழ முடியாதவர் இவர் இவர், இதனாற் பெரிதும் பயன் அடையக்கூடியவர் இவர் இவர் என்று கண்டு, அவரவர்க்குத் தருதல் மிகவும் விரும்பத்தக்கது. "யார்க்கும் இடுமின், அவர் இவர் என்னன்மின்'! என்று திருமூலர் கூறியபொழுது. இன்ன இன்ன சாதியார்க்குக் கொடுத்தல்தான் உயர்வு என்ற கருத்தினால் கொடுக்கப்பெறாது எல்லாச் சாதியாரும் எல்லா இனத்தவரும் தத்தம் நிலைமை காரணமாகப் பெறுதற்கு உரியராய் இருத்தல் கூடும் என்ற கருத்தினாற் கூறினார்போலும்.

கொடுக்கிறபொழுது அக்கொடையினால் மறு உலகத்தில் நன்மை உண்டு எனக் கருதிக் கொடுப்பதைவிட "செல்வத்துப் பயன் ஈதல்" என்ற கருத்தினாலும், "பொருள் அற்றவரின் வைப்புழியாகச் செல்வம் என்பால் தரப்பட்டுள்ளது" என்ற கருத்தினாலும் ஒருவர் கொடுத்தல் நல்லது. இதனைத்தான் கைம்மாறு வேண்டாக் கடப்பாடு என்பார்கள். ஆய் போன்ற வள்ளல்கள் அறவிலை வாணிகர் அல்லர் என்று கூறப்பட்டிருத்தல் இக்காரணத்தால் ஆகும். எனினும், கைம்மாறு கருதாமற் கொடுக்க விருப்பம் இல்லாதவர் பயன் கருதிப் பிறர்க்கு ஒன்று தருவாரானால், கொடாதவரைவிடச் சிறந்தவர் என்பதில் ஐயம் இல்லை. ஒருவர் அறம் செய்கின்றபொழுது மேல் உலகத்தில் நல்ல இன்பம் துய்க்கலாம் என்ற காரணத்தால் ஒருவேளை அறம் இயற்றுவர் என்றும், மறு பிறப்பு எய்தவில்லை என்றாலும் இப்பிறப்பில்தானே பெரும்புகழை நிலைநிறுத்தலாம் என்ற காரணத்தால் இயற்றுவர் என்றும் எயிற்றியனார் என்ற புலவர் ஒருவர் கூறிச் சென்றார் என்ற செய்தி புறநானூற்றால் அறியப்படுகிறது. எளியோர் இரத்தலும் செல்வர் கொடுத்தலும் ஆகிய செய்திகள் தேவர் உலகத்தில் இல்லை என்பார்கள். தேவர் உலகத்தில் எல்லாரும் செல்வர்கள் என்பது கருத்து. கொடை நிரம்பக்கொடுக்கிறவர் ஒரு காலத்தில் தேவர் தலைவனாக ஆதலும் உண்டு என்ற நம்பிக்கை "மணிமேகலை"யில் காணப்படுகிறது. ஆபுத்திரன் என்ற ஒருவனுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளில் வைத்து இது காட்டப்பட்டிருக்கிறது. மதுரையில் பலர் இடத்தும் பிச்சை ஏற்று, காணாதாரையும் கேளாதாரையும் கால் முடப்பட்டவரையும் பிறரையும் அழைத்து அவர்களுக்கு ஊட்டித் தானும் உண்டு, ஓட்டினைத் தலையின்கீழ் வைத்து உறங்குவது அவனது வழக்கம். அவன் பிறர்க்கு உதவிசெய்யும் பான்மையன்

என்பது அறிந்து அவனுக்கு அரும்பெறல் பாத்திரம் ஒன்று அளிக்கப்பட்டது. எடுக்க எடுக்கக் குறையாத அப்பாத்திரத்திலிருந்து மக்கள், மா, பறவை முதலியோரையெல்லாம் அவன் ஊட்டினுன். அப்பயன் மிகுதி ஆயிற்று. உடனே இந்திரன் அமர்ந்திருந்த ஆசனம் நடுக்கம் உற்றது. "எவனே ஒருவன் சிறந்த அறங்களைப் பூ உலகத்தில் இயற்றி இருக்கவேண்டும்; அதனுல் அன்றே அவன் இவ் வாசனத்திற்கு உரியவன் ஆகின்ருன்" என்று இந்திரன் கலங்கினுனும். ஏதாவது ஒரு வரத்தை நல்கி அவனை விடுத்துவிடலாம் எனக் கருதி இந்திரன் ஆபுத்திரன் முன்னிலையில் வந்து, "உன் அறத்தினுல் விளையும் பயனைத் தருவேன், வரம் கேட்க" என, ஆபுத்திரன் "எனக்கு வரம் வேண்டாம். நான் இவ்வுலகத்திலே இருந்து வருந்தி வந்தோர் அரும்பசி களைவேன்" என்று சொன்ஞன் என அறிகின்ருேம். ஆபுத்திரன் "தேவர் உலகில் இன்ப நிகழ்ச்சிதானே உண்டு! இவ்வுலகத்தில் அறங்கள் செய்கின்ற மக்கள், பிறரைப் பாதுகாக்கின்ற மக்கள் உண்டு. இவர்கள் இல்லாத தேவர் நன்னுட்டிற்கு இறைவனுகிய பெருவிறல் வேந்தே! இந்தப் பாத்திரத்தால் எளியவர்களை நான் ஊட்டினுல் அவர்கள் முகத்தில் ஒரு மலர்ச்சி உண்டாகின்றது. அந்த மலர்ச்சியைக் காண்பதே என் விழைவு" என்று கூறி இந்திரனுக்கு வருத்தம் தந்தனன் என இவனைப்பற்றி மணிமேகலை பகருகிறது. இதனுல் அறியப்படுவது எளியவர்களை இவ்வுலகம் பெற்றிருப்பதால்தான் உயிருள்ளதாக அது இருக்கின்றது என்பதாகும். திருவள்ளுவரும்,

"இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று"

என்று கூறினுர். அவர் கருத்துக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டுப் போல ஆபுத்திரன் செய்தி அமைந்திருக்கிறது.

ஆயினும், உலகத்திற் பெரியவர்கள் மக்களிற் சிலர் செல்வரென்றும், ஏழைகள் என்றும், உயர்ந்தவர் என்றும், அடிமைகள் என்றும் இருத்தல் ஒவ்வாது என முன்னரும் கருதியுள்ளார்கள்; இப்பொழுதும் கருதுகின்ருர்கள். செல்வர்கள் வறியவர்களுக்குக் கொடுக்கின்றபொழுது, "நாம் கொடுக்கக்கூடிய உயர்ந்த நிலையில் இருக்கின்ருேம், அவர்கள் வாங்கக்கூடிய தாழ்ந்த நிலையில் இருக்கின்ருர்கள்" என்று மகிழாமல், உலகத்திற் சிலர் பிறர் கையையே எதிர்பார்த்து வாழவேண்டிய நிலையில் இருக்கிருர்களே என வருந்திய உள்ளத்தோடு தருவார்களானுல், அவர்கள் மிகவும் பாராட்டப்படுவார்கள் என்பது உறுதி. சேர மன்னன் ஒருவன் தான் பிறர்க்கு நிறைய நிறையக் கொடுத்தான் எனினும், கொடுக்குந்தொறும் கொடுக்குந்தொறும் மகிழான் என்பது பதிற்றுப்பத்தால் அறியப்படுவது. காந்தியடிகளும் அண்மையான காலத்தில் இக்கருத்தினை வற்புறுத்தியுள்ளார் என்பது பலர் அறிந்த செய்தி.

பொருளை உடையவர்கள் பொருளைப் பிறர்க்கு ஈயும் கடமை உடையவர்கள் என்ருலும், பொருள் அவர்களிடத்து ஒப்படைக்கப்

பட்டு இருக்கின்ற பெரும் பொறுப்பு என்ருலும், அதனைப் பிறர்க்குத் தரும்பொழுது அது காரணமாகச் செல்வர்கள் செருக்குக் கொள்ளுதல் கூடாது என்ருலும், அதன் பயனைப் பெறுகின்றவர்கள் நன்றி உடையராய் இருத்தல் வேண்டும் என்பது மாத்திரம் வற்புறுத்தத் தக்கது. "அவன் சொத்து எல்லாம் என் சொத்து; எனக்காக அவன் அதனைப் பாதுகாத்து வருகின்ருன்; வேண்டும்பொழுது அதனைப்பெற எனக்கு உரிமை உண்டு; தராவிட்டால் உதைத்தோ அடித்தோ பெறுவேன்" என்பதுபோல நினைக்கின்ற கருத்து ஒரோ ஒரு இடத்தில் இப்பொழுது காணப்படுகிறது. எனினும், தமிழ் அறங்களுட் சிறந்த நன்றியுடைமை என்பதொன்று உண்டு. அதனுல், பிறரிடமிருந்து ஒரு நன்மை பெற்றவர்கள் அவர்க்கு நன்றி காட்டவேண்டிய அறம் உடையவர் என்பது அறியப்படல் வேண்டும். தமக்கு நன்மை செய்த வள்ளல் ஆதனுங்கன் என்பவனை நெஞ்சில் பதித்துக்கொண்டு இருப்பதாகவும், தம் உயிர் நீங்குங்கால் தம்மையே மறந்தால் அன்றி அவனை மறத்தல் இயலாது என்பதாகவும் ஆத்திரையனுர் என்ற புலவர் கூறினுர். பிட்டங்கொற்றன் என்ற தலைவனைப் பாடிய காரிக்கண்ணனுர் என்ற பெரும்புலவர் அவனுக்குச் சிறு துயரமும் உண்டாகக் கூடாது என்றும், அவன் ஈடுபடும் தொழில்கள் எல்லாம் வெற்றியுடன் முடியவேண்டும் என்றும் விரும்பி வேண்டினுர் என்பது புறநானூற்றுப் பாடல் ஒன்ருல் அறியப்படுகிறது. அவன் நடந்த வழிகள் அக்காலத்தில் முட்களும் கற்களும் நிரம்பியனவாக இருந்தமையின், அவன் அடியில் முள்ளும் பொருந்தாமல் இருப்பதாகுக என்று வேண்டவேண்டிய நிலையில் அப்புலவர் அக்காலத்தில் இருந்தார். அவனிடத்து வைத்த மதிப்பினுல் அவனைத் தந்தைபோன்றவனுகக் கருதினுர். அதனுல்,

"யாம்வேண்டி யாங்குளம் வறுங்கலம் நிறைப்போன்
தான்வேண்டி யாங்குத் தன்னிறை யுவப்ப
அருந்தொழில் முடியரோ, திருந்துவேற் கொற்றம்
* * * * * * * * *
....எந்தை உள்ளடி
முள்ளும் நோவ உருற்க"

என்று பாடினுர்.

எனவே, அறங்கள் இயற்றுகிறவர்கள் இன்னவர்தாம் என்ற வரையறை இல்லை என்பதும், ஈகைக்கு உரியவர்கள் இன்னின்ன சாதியினர் என்ற வரையறை கூடாது என்பதும், மனத்தில் மாசு நீக்கிச் செய்யப்படும் அறமே தலையாய அறம் என்பதும், புற வேடங்களுக்கு மதிப்புத் தருதலைவிட அக ஒழுக்கத்திற்கும் அக நிலைக்கும் கொடுக்கப்படும் மதிப்பு சிறந்ததாக இருக்கவேண்டும் என்பதும், அறம் செய்வோர் செருக்குக்கு இரை ஆதல் கூடாது என்பதும், அறப்பயன் பெறுபவர் நன்றி உடையவராக இருத்தல் வேண்டும் என்பதும் எடுத்துக் காட்டப்பட்டன.

புதுச்சல்லி.

சு. கு. அருணசலனர்
அறுவைவணிகர் அம்மாப்பேட்டை, சேலம்.

இரா. நெடுஞ்செழியனர் 'நயாபைசா' என்பதனைத் தமிழில் புதுக் காசு என வழங்கல் வேண்டுமெனக் கூறிவருகின்ருர். இதனைப் பின்பற்ற வேண்டுமெனச் சிலர் பேசியும் எழுதியும் வருகின்றனர். அவர் காசு, பைசா என்பதன் பொருளை யறியாமையால் அங்ஙனம் தவறினர். அது 'புதுச் சல்லி' எனவே வழங்கற்பாலதென்பது எமது ஆய்வுரையால் விளங்கும்.

'நயா' என்பது புதிது எனப் பொருள்படும். இச்சொல் மேலை யாரிய மொழிகளில் (ஆங்கிலோசாக்குசன்) Niew, neowe, (இதன் இனச்சொல் செருமனியில் new) ஐரிசு (Irish) nuadh, (இலத்தீன்) novus, கிரீக்கு neos எனப் பல்வேறு வடிவில் வழங்குகிறது. இது (நயா) வடமொழியில் நவ (Nava) என வழங்கும். எனவே நமக்குத் தெரிந்த நியூ, நவ என்ற சொல்லே இந்தியில் நயா எனத் திரிந்தது என அறியலாம். நவ–நய, வகரத்திற்கு யகரம் போலி. பைசா–அணுவின் பன்னிரண்டில் ஒரு கூறு ($\frac{1}{12}$, one twelfth of an anna) பைஸ். (a pice) - அணுவின் காற்கூறு. சேலம் மாவட்டத்தில் ஒருகாலத்தில் காலணு அளவாகத் தண்டிய (வசூலிக்கப்பட்டுவந்த) ஆள்வரி (A kind of poll tax of quarter anna per head once in vogue in Salem district (Regional tax) இப்போது நூற்றின் ஒரு கூறே இந்தியில் பைசா எனப்படுகிறது. பன்மையில் பைசே என்பர். ஆகவே நாமும் காசின் மிகச் சிறு கூற்றைக் (பகுதி)குறிக்கும் தமிழ்ச் சொல்லால் வழங்கலே ஏற்புடைத்து. அதற்கு வழக்கிலுள்ள 'சல்லி' என்னும் சொல்லே பொருந்துவது. சல்லி என்பது 'து' என்னும் ஒன்றன்பால் விகுதியும் அ, வை என்னும் பலவின்பால் விகுதியும் பெருமையால் பால்பகா அஃறிணைப் பெயராதலின் அஃது ஒருமை, பன்மை ஆகிய இருமைக்கும் பொதுவாம். அதன் எண்ணை அதன் பயனிலைகளேனும் எண்ணுப் பெயரெச்சங்களேனும் காட்டும். இந்தியில் (ஆ) இல் முடியும் ஆண்பால் பெயர்ச் சொற்களின் (ஆ) பன்மையில் (ஏ) ஆகமாறும். இந்தியில் அகரத்திலேனும், ஆகாரத்திலேனும் முடியும் சொற்கள் ஆண்பாலாம் (காட்டு) பல—பழம்; (ரஸ்தா)—பாட்டை. எனவே இந்தியில் நயாபைசா என்பது பன்மையில் நயேபைசே எனஆகும். தமிழில் பொருள்பற்றியே பால் வகுக்கப்படுகின்றது. "உயர்திணை யென்மனர் மக்கட்சுட்டே—அஃறிணையென்மனர் அவரலபிறவே— ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே" (தொல்சொல்.க)என்ற அரிய திணைப்பாகுபாட்டிலக்கணமும் இந்தியில் இல்லை.

இனிச் சல்லி என்பதன் பொருள் தெரிவாம். சல்லி என்பது நாணயம் என்ற பொருளுள்ள காசு என்பதோடு சேர்ந்து 'சல்லிக் காசு' எனவும் வழங்கும். சிறுவனைச் 'சல்லிப்பையன்' எனக்கூறும் வழக்கிலிருந்து சல்லி என்பது 'சிறிய, நுண்ணிய' எனப் பொருள்

படுதலையறியலாம். சல்லி சன்னம் முதலிய சொற்களைத் தோற்று விக்கும். இதனால் உடைந்த செங்கல், ஓடு, கல் முதலிய (Broken bricks tiles stones etc.) வற்றைச் சல்லி என்பது குறிக்குமாற்றை வழக்கிலும் கண்டுவருகின்றோம். கிளிஞ்சல் முதலியவற்றின் சிற்றோடும் (சிறுஓடு) சல்லிஎன வழங்கும். பொடிக் கற்களைக் கல்லாதோரும், கற்றோருள் சகரத்தைப் பலுக்க (ஒலிக்க) வெள்குவோரும் 'ஜல்லி' (சூட்டை ஜூடு என்பதுபோல) என்பர். இது பிழை. சல்லியை (உடைந்த ஓட்டை)க்காசு அளவில் வட்டமாக வடித்து (செப்பஞ்செய்து) ஆடும் (விளை) ஆட்டுச் 'சல்லி அல்லது சில்லி' எனவே பெயர் பெறுதலும் காண்க. ஓட்டாஞ்சல்லி என்னும் வழக்கையும் நோக்குக. 'எறிசல்லி புதுமலராக்கினான்காண்' என்பது தேவாரம் (596,8) சில்லியும் சிறியவடிவைக் குறித்தல் "சில்லி வண்டு" "சில்லைச் சிறுகுடி" (சிலம்பு க0-கசஎ) என்னும் வழக்காலுணர்க. ஆகவே பொடிக்கல் முதலியனபோல மிகக் குறைந்த மதிப்புள்ள காசே (நாணயம்) 'சல்லி' என வழங்கப்பட்டதையறிக. திருநெல்வேலியில் சல்லி அல்லது சல்லிக்காசு என்னும் வழக்குண்மையை ஈண்டு நோக்கிக்கொள்க. மதிப்பளவில் புதுச்சல்லி எனப்படினும் வடிவளவில் பழஞ்சல்லியே.

இனிப் பண்டமாற்றும் காசும்பற்றிய வரலாறு கூறிக் காசு என்னுஞ் சொல் நாணயம் (coin நாணகம் வடசொல்; தெலுங்கு nanyamu; கன்னடம் nanya; மலையாளம் nanyam) என்னும் பொருளில் வழங்கப்பட்டதைக் காட்டுவேம். "உலகமெங்கணும் முதற்காலத்தில் பொருட்பரிமாற்றமெல்லாம் பண்டமாற்று (Barter) முறையிலேயே நடந்துவந்தது. அதன்பின் படிப்படியாகக் காசு (நாணயம்) என்னும் பரிமாற்றக் கருவி ஏற்பட்டது.

பிற நாடுகளில், நாணயம் முதலாவது கல்லுங்கவடியும் கொட்டையும் தோல்துணுக்கும் போன்ற உலக மதிப்பற்ற குறிப் பொருளாயிருந்து, பின்பு தாது (உலோக)ப் பொருளாக மாறியது. தமிழகத்தில் ஏராளமாய்ப் பொன் விளைந்ததினாலும், பழங்காலத்திலேயே தமிழர் நாகரிகமடைந்திருந்ததினாலும், தமிழர் தொடக்கத்திலேயே தாதுக்களிற் சிறந்த பொன்னைக் காசாகப் பயன்படுத்தினர்.

தமிழர் முதன்முதற் பயன்படுத்திய தாது பொன்னாயிருந்ததினாலேயே, பொன் என்ற சொல்லிற்கு உலோகம் என்னும் பொருளும், பிற்காலத்திற் கிடைத்த வெள்ளி செம்பிரும்பிற்கு முறையே வெண்பொன், செம்பொன், கரும்பொன் என்ற பெயர்களும் தோன்றின.

உலக மதிப்புள்ளதும் உறுதியானதும் எளிதாய் இடம் பெயர்க்கக்கூடியதும் சிறு மதிப்பையும் பெரு மதிப்பையுங் குறிக்கச் சிறிதாகவும் பெரிதாகவும் வெட்டப்படக்கூடியதும் அங்ஙனம் வெட்டப்படினும் தன் அளவிற்குரிய மதிப்பிழக்காததும் உருக்கி வேண்டி

யாங்கு வடிவுறுத்தக் கூடியதும் பொன்னேயென்று தமிழர் கண்டு கொண்டதினால் அதனையே பரிமாற்றுக் கருவியாகப் பயன்படுத்தி வந்தனர்.

கட்டித் தங்கக் காசை நிறுத்து முத்திரையிட்ட பழைய அரசியல் அதிகாரி வண்ணக்கன் (நாணய பரிசோதகன்; நோட்டக்காரன்) எனப்பட்டான். வண்ணக்கருள்ளும் புலவரிருந்தனர் என்பது கழகப் பாடலால் அறிகிறோம், அவர்கள் வண்ணக்கஞ் சாத்தனார், புதுக்கயத்து வண்ணக்கன் கம்பூர்கிழான் (நற்றிணை உகூச) முதலியோராவர். வண்ணக்கர் காணத்தை நீலமென்பர். (தொல் சொல் சேனா. உரை. கஎ)

ஆயினும், முதலடியிலேயே பொன் இப்போதுள்ள காசாக முத்திரையிட்ட தகட்டு வடிவம் பெறவில்லை. அது சிறிதும் பெரிதுமான கட்டியாகவே (Bullion) முதலாவது வழங்கிவந்தது. அக்கட்டிகள் கொட் பயறு, (காணம்) குன்றிமணி, மஞ்சாடிவிதை, கழற்சிக்காய் (கழங்கு) முதலிய பல பொருள்களின் நிறைகளுள்ளனவாயிருந்தன. அவற்றைக் கட்டி நாணயம் என்னலாம்.

பிற தாதுக்கள் கிடைக்கப்பெற்றுப் பொன் அருகி வந்தபோது நாணயப் பொற்கட்டிகள் பல நாளடைவில் அராவியெடுக்கப்பட்டு எடை குறைந்தும் செம்பு கலந்து மாற்றுத் தாழ்ந்தும் போயின. அதனால் அரசியலதிகாரிகளும் நகர வணிகர் குழாங்களும் நாணயக் கட்டிகளையெல்லாம் உரைத்தும் நிறுத்தும் நோட்டஞ்செய்து அவற்றுள் மாற்றும் நிறையும் சரியாயுள்ளவற்றிற்கு முத்திரையிட வேண்டியதாயிற்று. அங்ஙனம் முத்திரையிடுவதற்குக் கட்டி வடிவினும் தகட்டு வடிவம் ஏற்றதாகலின் முத்திரை நாணயங்களெல்லாம் நாளடைவில் தகட்டு வடிவு பெற்றுவிட்டன: முத்திரையும் தகட்டு வடிவமே நாணயத்திற்கு முதன்மையான இயல்களாதலின், முத்திரைபெற்ற நிலையைக் காசு நாணயத் தொடக்கம் எனக் கூறலாம்.

"அன்றே யமைந்த பசும்பொன் அடர்ஆறுகோடி
குன்றுமல் விற்றான் குளிர்சாக ரதத்தன் என்பான்"

என்னும் சிந்தாமணிச் செய்யுட் பகுதியில் (கஉஎஙு) வந்துள்ள பொன் அடர் என்பதைத் தகட்டுப்பொன் என்பர் நச்சினார்க்கினியர். அடர் என்பது தகடு.

'............மூவேந்தரும் தத்தம் முத்திரையிட்ட காசுகளையே தந்தம் நாட்டில் அரசியல் நாணயமாக வழங்குவித்தனர்,...அவை சேரன் காசு, சோழன் காசு, பாண்டியன் காசு என வழங்கின". (பழந்தமிழாட்சி — பக்கம் கூடு-டு திரவிட மொழி நூல் ஆராய்ச்சியாளர் ஞா. தேவநேயப்பாவாணர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

"ஈசன் றன்னை யேத்தின வென்று
காசும் பொன்னும் கலந்து தூவியும்" திருவிடைமருதூர் மும்மணிக்கோவை (பட்டினத்தார் உஅ: ௩௯-௪௦)

"வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசின் மிழலையீர் ஏச லில்லையே" சம்பந்தர் தேவாரம் திருவீழிமிழலை க.) "கறைகொள் காசினை (ஷ 2) காசு—coin. (பணம் — காசுத்தொகுதி (Money) காசுக்கடை — வட்டக்கடை A money changer's shop) (தங்கம் வெள்ளி விற்கும் இடம் shop dealing in gold and silver) காசடிக்க—to coin. காசுக் காரன்—செல்வன். (A rich man) காசுக் கள்ளன்—இவறியான் (உலோபி—miser.)

சல்லிக்காரன் (பணக்காரன்) என்பதோவெனில் சிறுதுளி பெருவெள்ளம் போலச் சல்லி பல உடையான் என்பதுபற்றி வந்தது. துட்டுக்காரன் (துண்டு⇒துட்டு) என்பதும் அது இந்தியில் 'பைசா வாலா' என்பதும் இக்கருத்துப்பற்றியே வந்ததென்க. செல்வம் வெறுக்கையெனப் பட்டதும் சிறு துளி பெருவெள்ளம் போலப் பல பொருளின் (காசு முதலியன) செறிவேயன்றிச் சிலர் கூறுமாறு வெறுக்கப்படுவதன்று, "விறப்பு முறப்பும் வெறுப்புஞ் செறிவே" (சொல் உரி. ௫௧.) யாதலின். அன்றியும் ஒரு சல்லிக் காசுமில்லாத வறியவனுக்குச் சில சல்லி உடையவன் செல்வனாகத் தோன்றலின் 'சல்லிக்காரன்' எனப்பட்டானெனினுமோராற்ருன் அமையும்.

அம்மன்காசு—பிரகதாம்பாள் உருவம் பொறித்த சிறு செப்புக் காசு (A small copper coin current in Pudukottai State so called as it bears the figure of the Goddess பிரகதாம்பாள், 5 of which are equal to 3 pies.)

'செம்புக்காசு, வெள்ளிக்காசு, பொற்காசு' என்னும் வழக்கும் காசு என்பது நாணயம் என்ற பொருளையே குறித்தல் காண்க. காசு கொள்ளா இறையிலி—ஒருவகை வரியுமின்றி அளிக்கப்பட்ட நிலம் (Land granted free of tax.)

காசுகடமை—உடன் பண (ரொக்க) வரி (Tax payable in money) (கல்வெட்டு மடலம் (Vol.) (2) இவற்ருல் காசு என்பது நாணயத்தையே (A piece of metal legally stamped and current as money, also the die to stamp money: a wedge) குறித்தலறிக. சில இடங்களில் உயர்ந்த மதிப்புள்ள நாணயத்தையும் பொருளையும் குறிக்கும். பழைய பொன் நாணயம். (கல்வெட்டு) உயர்ந்த மதிப்புள்ள பொருளுக்குக் காட்டு: காசுமாலை—பொற்காசு கோத்த மாலையணி; மணி "நாண் வழிக்காசுபோலவும்" (இறையனர் அகப்பொருள் 2. உரை; அச்சுத்தாலி காசும் பிறப்பும் கலகலப்ப (திவ்வியப்பனுவல் எ); மேகலை "பட்டுடை சூழ்ந்த காசு"

சீவகசிந்தாமணி சசுஅ. இவற்றால் புதுக்காசு என்ற இவர் கூற்றுக்குப் புது நாணயம் எனப் பொருள்பட்டவாறறிக.

ஐந்து புதுக்காசு என்று இவர் கருதுவது ஐந்து புதுச் சல்லியையே (5 ந. பை.) ஆனால் ஐந்து புதுக்காசு என்பது புதுச் சல்லியில் எந்த மதிப்பேனும் உள்ள ஐந்து காசை (நாணயம்)க் குறிக்கும். அதனை (ஐந்து புதுக்காசு) ஐந்து தாள்காசு (Five currency notes) என்றாற்போலக்கொள்க, எம் மதிப்பேனும் உள்ள ஐந்து தாள் தொகுதியை (நாணயம்)க் குறித்தலின். அன்றி இவர் எல்லாப் புதுக்காசும் ஒரு புதுச்சல்லி மதிப்புக்கொண்டது என்று கருதிக்கொண்டாரா? அங்ஙனம் இல்லாமையின் இவர் கூற்றுப் பொருளிலமொழிதலின்பாற் படும். பொதுமக்களும் எல்லாக் காசையும் (நாணயம்) அதனதன் மதிப்புக் கருதாது புதுக் காசு என்றே கூறுவர். இவ்வழக்கானும் ஐந்து புதுக்காசென்பது ஐந்து புதுச் சல்லியைக் குறிக்காது எந்த மதிப்பேனும் உள்ள ஐந்து புதுக்காசையே (நாணயம்) குறிக்கும் என உய்த்துணரலாம். நாளடைவில் (நாள் செல்லச் செல்ல in course of time பழைய காசு முற்றும் ஒழிந்தபின்) புதுச்சல்லி என்பது, 'புது' என்ற சொல் மறைந்து 'சல்லி' என்று வழங்கும். ஆங்கிலர் சிங்கள நாட்டில் இந்நூற்றின் கூறு முறையைப் புகட்டினாரேனும் இவ்விந்திய நாட்டில் அதனைப் புகுத்தினாரில்லை. அக்குறை இந்நாளைய அரசினரால் களையப்படுவது போற்றத்தக்கதே. இம்முறையில் கணக்கிடுவது எளிது. இதுபோன்ற முறையே உலகில் பெரும்பாலான நாடுகளில் நிலவுவது. அவர் இந்திச்சொல்லை மட்டும் அதற்கிட்டதே மிகமிக வருந்தற்குரியது. பரிமாற்றக் குழப்பத்தைச் சிலர் பயன்படுத்திக்கொண்டு பண்டங்களின் விலையை யேற்றி விட்டனர். அரசினரும் இதற்கு விலக்கல்லர். காசு (நாணயம்)ப் பரிமாற்றத்தில் நடுவண் அரசினர்க்கும் நாட்டு அரசினர்க்கும் (State Government) ஒருமைப்பாடு இல்லை. சிலர் ஓரணாவுக்குத் தாம் கொடுப்பது ஆறு புதுச்சல்லி; பெறுவதோ ஏழு புதுச்சல்லி. இவர் என்றுமே

"தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதூஉம் மிகைகொளாது கொடுப்பதூஉம் குறை
கொடாது" (பட்டினப்பாலை உ0கூ-மி—பொருள் வருமாறு' தம் பொருள்களையும் தமவல்லாத பிற பொருள்களையும் ஒருபடியாக ஆராய்ந்து பிறர்பால் தாம் கொள்வதும் மிகுதியாகக் கொள்ளாது பிறர்க்குத் தாம் கொடுப்பதும் குறையாகக் கொடாது) என்பதற்கு விலக்கென்க. தமிழர் யாவரும் நயாபைசாவைப் 'புதுச்சல்லி' என்றே வழங்குவாராக!

[குறிப்பு: இக்கட்டுரை எழுதி முடித்தபின் செந்தமிழ்ச்செல்வியில் 'நயா பைசாவைப் 'புதுக்காசு' என வழங்கல் வேண்டுமென்ற குறிப்பைக் கண்டேன். இக்குறிப்பும் மேல் உரைத்தமைகொண்டு மறுக்கப்பட்டவாறறிக.]

நற்றிணையில் தாவரங்கள்.

வித்துவான், சொ. சிங்காரவேலனார்.
தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர்.

இலவம்: முள்ளிலவ மரத்தினை நமக்கு முடத்திருமாறன் என்ற கவியரங்கேறிய காவலனே காட்டுகின்றனன். காய்ந்த கொடிகள் சுற்றிய முட்கள் பொருந்திய அடியை உடைய இலவ மரத்தினது கிளைகள் நடுங்கும்படி வீசிய கொடிய காற்று அவற்றை முறியவும் செய்கின்ற வேகத்தை எழுதிக் காட்டுகிருன் இக்கவிஞன்.

'முளிகொடி வலந்த முள்ளரை இலவத்து
ஒளிர்சினை அதிர வீசி விளிபட
வெவ்வளி வழங்கும் வேய்பயில் மருங்கில்' (105)

கொன்றை:

கொன்றை மரம் முல்லைக் கருப்பொருளாக மொழியப்படும். சிவபிரானுக்கு மலர் கொடுக்கும் சிறப்பு இம்மரத்துக்கே வாய்த்ததாகும். அதனாலன்றே 'கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்' என்று அகநானூற்று முகப்பிலும், 'கண்ணி கார்நறுங் கொன்றை' என்று புறநானூற்று முகப்பிலும் பொலிந்திலங்கும் தமிழ்ப் பெருமையை இது பெற்றது.

கொன்றை கார்காலத்து மலரும் இயல்பினதென்பதனை இளந்திரையனார்,

'பிடவும் கொன்றையும் கோடலும்
மடவ வாகலின் மலர்ந்தன பலவே' (99)

என்று கூறியுள்ளனர். இவ்வாறே விழிக்கட் பேதைப் பெருங்கண்ணனாரும் கார்காலத்து இதன் மலர்ச்சியைப் பாடியுள்ளனர்.

'இலையில் பிடவம் ஈர்மலர் அரும்பப்
புதலிவர் தளவம் பூங்கொடி அவிழப்
பொன்னெனக் கொன்றை மலர மணியெனப்
பன்மலர்க் காயாங் குறுஞ்சினை கஞலக்
கார்தொடங் கின்றே காலை' (242)

என்பது அவர் இன்மொழி.

இதன்காய் உள்ளே புழல் அமைந்ததென்பதனைக் குதிரைத் தறியனாரும், சல்லியங்குமரனாரும் சாற்றியுள்ளனர்,

'புழற்காய்க் கொன்றைக் கோடணி கொடியினர்' (296)
'பொரியரை ஞெமிர்ந்த புழற்காய்க் கொன்றை' (142)

என்பன முறையே அப்பாவலர் மொழிந்துள்ள பகுதிகளாம்.

(தொடரும்)

திருமுறைகண்ட புராணத்திற் கூறியுள்ள தேவாரப் பண்களின் கட்டளை விளக்கம்.

V. S. கோமதிசங்கர ஐயர்,
(வீணை விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.)

தேவாரத் திருமுறைகளிற் கூறியுள்ள பண்ணமைதிகள், அவற்றின் கட்டளை விபரங்கள் இவைகளை நாம் நன்காராய்ந்து அறிவதற்குத் திவாகரமும் பிங்கல நிகண்டும் பயனுள்ளவைகளாகின்றன. அவற்றில் மொத்தம் நூற்று மூன்று (103) பண்கள் குறிக்கப்பெற்றுள்ளன. இப்பண்களின் விபரங்களை நாம் அறிவதற்குத் தக்கதாக ஓர் வகைசெய்து நூல்களில் கூறியிருப்பினும் இந்த நூற்று மூன்று(103)ம் பண்கள் (இராகங்கள்) என்று நிச்சயமாகக் கருதுவதற்கும் இடமில்லை. ஏனெனில் பிங்கல நிகண்டில் பண்களுக்கு லட்சணம் கூறும்போது எந்தப் பண்ணானது யாழுடனும், திறத்துடனும் விளங்குமோ அதுவே பண் என்ற சிறப்பெய்தும் என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே பெரும் பண் பதினாறும் (16) யாழுடனும் திறனுடனும் வருபவையல்ல. பொதுப் பண்கள் மூன்றுக்கும் (3) யாழும் திறனும் கிடையா. ஆகவே நூற்றுமூன்றில் (103) பத்தொன்பது (19) பண்கள்போக எண்பத்து நான்கு (84) பண்களே யாழ்களுடனும் திறங்களுடனும் வருபவை என்பதை மேற்கூறிய நூல்களிலிருந்தும் பண்களின் அட்டவணைப் பதிகத்தினின்றும் நன்கு அறியலாம்.

பாலை—குறிஞ்சி—மருதம்—நெய்தல் என்று நான்கு யாழ்கள் உள்ளன. (யாழ்களென்றால் யாழ் என்னும் கருவியைக் கொள்ளாது இசையின் சுர ஒலிகள் என்ற பொருளில் மனத்திற் கொள்க,) இந்த நான்கு யாழ்களுக்கும் இருபத்தொன்று (21) திறங்களுள்ளன. ஒவ்வொரு திறத்திற்கும் அகம்—புறம்—அருகு—பெருகு என்று நான்கு நிலைகளுள்ளன. ஆகவே $21 \times 4 = 84$. இந்த எண்பத்து நான்கு பண்களும் யாழையும் திறத்தையும் பெற்றுப் பண்பாடடைந்த பண்கள் (இராகங்கள்) ஆகின்றன, மற்றவைகளெல்லாம் நூலின் விரிவுகளாகும்.

மேலே கூறிய எண்பத்து நான்கு (84) பண்களில் திறத்தின் பெயரே பண்ணின் பெயராக அமைந்து வருவதில் குறிஞ்சியாழ்த் திறத்தின்கீழ் வருவதான காந்தாரம்—பஞ்சுரம்—மருள்—செந்திறம் என்ற நான்கும், நெய்தல் யாழ்த்திறத்தின்

கிழ் வருவதான யாமை—முல்லை என்ற இரண்டும் ஆக இந்த ஆறு திறங்களும் அகநிலைப் பண்களின் பெயர்களாகக் குறிக்கப்பெற்றிருப்பதைக் காணலாம். பாலையாழ்த்திறத்தின் கீழே வரும் நேர் திறம் என்ற திறமே அகநிலைப் பண்ணின் பெயராக வந்தாலும் இதன் திறத்திற்கும், பண் பெயருக்கும் பொருளமைதிகளும் இயக்க பேதங்களும் தெளிவாகின்றன. இது போல மற்றைய திறப் பெயர்களாகிற ஆறு திறங்களுக்கும் பண்களுக்கும் அவற்றிற்குப் பொருளும் அவற்றிற்கு அமைதிகளும் ஒலி நுட்பங்களும் ஆகிய இவைகளின் வழிகள் நமக்கு நன்றாகத் துலங்கவில்லை. இவைகள் விளங்காத காரணங் கொண்டு இந்த ஆறும் பண்களில்லை என்றே எண்ணுதற்கு இடமளிக்கின்றன. ஆனால் இந்த ஆறு திறங்களுக்கும் புறநிலையிற் பண்களுள்ளன. அப்பண்களானவை தனது இயக்கங்களிலும் குண விசேஷங்களிலும் அகநிலை புறநிலை என்ற இரண்டு தத்துவங்களையும் ஒருமிக்கப்பெற்று மிகுந்த சிறப்பைப் பெறுகின்றன. இந்த ஆறும் மற்ற எல்லாப் பண்களும் அடைய முடியாத ஓர் தனிப் பண்பைப்பெற்றுச் சிறப்பை அடைகின்றன. அவ்விபரங்கள் பண்ணாராய்ச்சியில் விளக்கி வருகிறோம்.

யாழ்களுடனும் திறங்களுடனும் கூடி எண்பத்து நான்கு (84) பண்களில் மேலே கண்ட ஆறு (6) பண்களும்போக மொத்தம் எழுபத்தெட்டு (78) பண்களே உள்ளனவாக அறிவோம். இந்த எழுபத்தெட்டுப் பண்களும் இராக ரஸபாவ உணர்ச்சி வகைகளைச் சிறப்பாக எடுத்துக் காட்டும் சீர்களைப் பெற்றவைகள் ஆகின்றன. இந்த எழுபத்தெட்டு (78) பண்களும் தேவாரத் திருமுறைகளினின்றும் கிடைக்கப்பெறுமல் மறைந்தன. அவற்றோடு அதற்குரிய தேவாரப் பதிகங்களும் மறைவு உற்றன. இவற்றில் இருபத்து நான்கு (24) பண்களுக்கே தேவாரப் பதிகம் உள்ளபடியால் ஏனைய ஐம்பத்து நான்கு (54) பண்களுக்கும் (இராகங்களுக்கும்) பதிகங்கள் (இயல்) வேண்டும் என்ற கருத்துக்கொண்டு உமாபதி சிவாச்சாரியாரவர்களால் தேவார இசைக் கட்டளை பேதங்கள் வகுக்கப்பெற்றன. இருபத்தி நான்கு (24) பண்களுக்குரிய தேவாரப் பதிகங்களை மற்றைய ஐம்பத்திநான்கு (54) பண்களின் (இராகங்களின்) இசையானந்தத்தைப் பெறுவதன் பொருட்டுத் தேவார இயலையும், தாள இயலையும், இராக இயலையும், கட்டளைகள் என்று வகைப்படுத்தி அறியச் செய்தனர். ஆகவே எழுபத்தெட்டு (78) பண்களே நற்றிறமும் யாழும் பெற்று உயிரியக்கமுள்ள இராகங்களாகிறபடியால் இவைகளே கட்டளை பேதங்கட்கு உட்பட்டு வருபவைகளாகும்.

யாழ்—திறம் இவைகளைப் பெற்ற எழுபத்தெட்டுப் (78) பண்களில் சில தமிழ் நாட்டுப் பண்புகளையும் இயக்கங்களையும் உடையனவாகவும் இன்னும் சில வடநாட்டுப் பண்புகளையும் இயக்கங்களையும் உடையனவாகவும் விளங்குகின்றன. மொகலாய அரசாங்க காலத்துப் படையெடுப்பு, அவர்களது ஆட்சி முதலிய காலத்திலே இருந்து தென்னாட்டு இசை வடநாட்டு இசையென்று பிரிவுபட்டன. அதற்கு முன்பெல்லாம் ஒன்றாகவே இருந்தன. ஒரே தமிழை யாழ்ப்பாணத்தாரும், திருநெல்வேலி ஜில்லாவிலுள்ளோரும், தஞ்சை ஜில்லா, தென்னாற்காடு சென்னை முதலிய இடங்களிலுள்ளோரும் பேசும்போது எவ்வித மாறுபாடடைகின்றதோ அத்தன்மைபோன்றே அக்காலத்தில் ஓர் இசையை (இராகத்தை) தென்னாட்டாரும் வடநாட்டாரும் பாடும்போது விளக்கமாகும். அதன் காரணமாகவே நூல்களில் இரு நாட்டாரின் பண்பாடுகளும் விளக்கமாவதுபோல பிங்கலந்தை முதலிய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வாறு குறிப்பிடப்பட்டவைகளில் தமிழ்நாட்டில் பிரசித்திபெற்ற பண்களையே (இராகங்களையே) இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

பாலையாழின் அகநிலையில் வருவதான தக்கராகம், நேர்திறமென்ற புறநீர்மை, பஞ்சமம், சோமராகம், காந்தாரம், என்ற ஐந்து பண்களும்; குறிஞ்சி யாழின் அக நிலையில் வருவதான நட்டபாடை, கௌவாணம், அனுத்திரபஞ்சமம், குறிஞ்சி, என்ற நான்கு பண்களும்; மருத யாழின் அக நிலையில் வருவதான தக்கேசி இந்தளம், பாக்கழி, பியந்தை என்ற நான்கு பண்களும்; நெய்தல் யாழின் அகநிலையில் வருவதான குறண்டி, யாழ்பதம், என்ற இரண்டு பண்களும் ஆக $5+4+4+2=15$. இந்தப் பதினைந்து பண்களும் அகநிலை குணங்களைப்பெற்ற தமிழ் நாட்டு இராகங்களும் பண்களுமாகும். இவைகள் கடவுள் தன்மைகளைக் குறிக்கும் அகத்தன்மைகளை உடையவை. ஞான சாதனத்திற்கு உரியன.

பாலையாழின் புறநிலையில் வருவதான அந்தாளி பாடை, வராடி, திராடம், மேகராகம், சிகண்டி என்ற ஐந்து பண்களும்; குறிஞ்சி யாழின் புற நிலையில் வருவதான அந்தாளிக் குறிஞ்சி, செருந்தி, பழம் பஞ்சுரம், பாடை, பழந்தக்கராகம், குர்ச்சரீ, நட்டராகம், தக்கணாதி என்ற எட்டுப் பண்களும்; மருதயாழின் புறநிலையில் வருவதான கொல்லி, சாதாளீ, தத்தளபஞ்சமம், சீகாமரம் என்ற நான்கு பண்களும்; நெய்தல் யாழின் புறநிலையில் வருவதான ஆரியவேளர் கொல்லி, தாளீ, சாளரபாணி. சாதாரீ—என்ற நான்கு பண்களும் ஆக $5+8+4+4=21$,

இந்த இருபத்தொரு பண்களும் புறநிலைக் குணங்களைப்பெற்ற தமிழ் நாட்டு இராகங்களாகும். இவைகள் மனிதனின் அருஞ் செயல்கள், அவனுக்குக் கிடைக்கும் மகோன்னதமான நிகழ்ச்சிகள் முதலியவைகளைக் குறிக்கும் புறத் தன்மைகளை உடையவை. பக்தி—வைராக்கியம் — சித்தி—யோகம் — தபஸ் முதலியவைகளுக்கு உரியவைகளாகும்.

அருகுநிலை பெருகுநிலை இவைகளில் வருவதான நாற்பத்திரண்டு (42) பண்களும் அவற்றின் இயக்கங்களும் வடநாட்டின் பண்புகள் ஆகுமாயினும் அவற்றுள்ளும் குறிஞ்சி யாழின் அருகியலில் வரும் மேகராகக் குறிஞ்சியும், பெருகியலில் வரும் வியாழக் குறிஞ்சியும்; மருத யாழின் பெருகியலில் வரும் காந்தார பஞ்சமமும், கௌசிகமும் ஆக இந்நான்கு பண்களும் தமிழ் நாட்டில் லட்சியமடைந்து தேவாரகாலந் தொடங்கியே நம் அனுபவத்தில் ஊறிவந்துகொண்டிருப்பதால் இவைகளும் நம் தமிழ் நாட்டு இராகங்களுடன் சேர்ந்து குறிக்கொண்டிருக்கின்றன. ஆகவே நம் நாட்டு இசை இன்றளவும் இராகமென்ற தன்மையில் நம்மிடையே குறிக்கொண்டிருப்பதனால் மேலே கூறிய 15+21+4 = 40—இந்த நாற்பது பண்களும் நம் தமிழ் நாட்டு இயக்கங்களையும் பண்புகளையும் பெற்று விளங்குகின்றனவாய்த் தெளிவாக அறிய ஏதுவிருக்கின்றன. வடநாட்டு இசைகளும் அவற்றின் இலக்கிய இலக்கண அமைதிகளும் நமக்குச் செவ்வனே புரியுமானால் அருகு பெருகிலுள்ள அப் பண்களையும் ஆராய்ந்தறிந்து அவைகள் இன்ன இராகமும் இன்ன இயக்கமுமுடையவைகளென்று நன்றாக எடுத்து விளக்கலாம். மேலே கூறிய நாற்பது (40) பண்களும் நம் வழக்கத்திலுள்ள நாற்பது (40) இராகங்களையே குறிப்பிடுகின்றனவெனக் கண்டோம். ஆனால் இன்ன பண்ணுக்கு இன்ன இராகமே உரித்தாகுமென்று எடுத்து விளக்குவதும், இன்ன பண் இன்னதின் இத்தனையாவது கட்டளையின்கீழ் வருகின்றது என்று நிச்சயப்படுத்துவதுமே இக்கட்டுரையின் நோக்கங்களாகும்.

தேவாரப் பண்களின் கட்டளை பேதங்களை உருவாக்கிய கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியரவர்கள் ஞானசம்பந்த சுவாமிகளுக்கும், திருநாவுக்கரசு சுவாமிகளுக்கும், சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கும் இவ்விவ்வளவு கட்டளை பேதங்களே உண்டென்று செய்யுள் வகையினால் தனித்தனியே குறிப்பிட்டுள்ளார்கள். ஞானசம்பந்த சுவாமிகளின் பத்தொன்பது (19) பண்களுக்கு அறுபத்தாறு (66) கட்டளை பேதங்களையும், திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு இருபத்திரண்டு (22) பண்

களுக்கு இருபத்தி மூன்று (23) கட்டளை பேதங்களையும், சுந்தர மூர்த்திசுவாமிகளுக்கு பதினைந்து(15)பண்களுக்கு முப்பத்தொரு (31) கட்டளை பேதங்களையும் விளக்கியுள்ளார். ஆக இவைகளைக் கூட்டினால் மொத்தம் 66+23+31=120 கட்டளை பேதங்கள் அதாவது நூற்றி இருபது இராகங்கள் உண்டென எண்ண இடமளித்தன. அவ்வாறே கூறியும் எழுதியும் வருகின்றனர். திவாகரம், பிங்கல நிகண்டு முதலிய நூல்களில் நூற்று மூன்று (103) பண்களே உண்டெனக் கூறும்போது இங்கு 120 கட்டளை வருவது உசிதமானதாகாது. இந்த 120 கட்டளைகளையும் உள்ளாழ்ந்து கவனிக்கும்போது எழுபத்தெட்டு (78) கட்டளைகளே தெளிவாகக் கிடைக்கின்றன. 103 பண்களையும் வகைப் படுத்திவரும்போது அதிலும் எழுபத்தெட்டு (78) பண்களே யாழுடனும் திறத்துடனும் வருகின்றனவென்பதை இதற்குமுன் குறித்துள்ளோம். திவாகரம், பிங்கல நிகண்டு இவைகளில் குறித்த தொகைகளுக்கும், திருமுறைகண்ட புராணத்திற் கூறியுள்ள கட்டளைத் தொகைகளுக்கும் நெருங்கிய சம்பந்தம் காணப்படுகின்றன. பண்களும் கட்டளைகளும் ஒரே எண்ணிக்கையில் காணப்படுவதால் உமாபதி சிவாச்சாரியார் அவர்கள் பண்களை நன்கு ஆராய்ந்தே இக்கட்டளை பேதங்களைக் கூறியிருத்தல் வேண்டுமென சந்தேகமின்றி எண்ணத்தகும்.

சம்பந்தர்—அப்பர்—சுந்தரர்—இம்மூவரின் கட்டளைகளைச் சேர்த்துக்கூட்டி 120 என்று கணக்கிட்டுவிட்டனர். இஃது விளக்கப்படுகிறது:— ஞானசம்பந்த சுவாமிகளின் 19 பண்களிலமைந்த தேவாரப் பதிகங்களை 19 பண்களில் மட்டுமன்றி 66 கட்டளைகளில் அதாவது இராகங்களில் பாடிக்கொள்ள வேண்டுமென்பதே இக்கட்டளையின் கருத்தாகும். இதுபோல அப்பர் சுவாமிகளின் 22 பண்களிலமைந்த தேவாரப் பதிகங்களை 23 கட்டளைகளில் (இராகங்களில்) பாடிக்கொள்ளவேண்டும். இவற்றில் நான்கு (4) பண்கள் தவிர மற்ற பத்தொன்பது (19) பண்களும் (இராகங்களும்) ஞானசம்பந்தருக்குக் கூறியதேயாகும். சம்பந்தருக்கு வாரதனவாக நான்கு பண்களே புதிதாக இதில் காணக்கிடைக்கின்றன. சுந்தர சுவாமிகளின் 15 பண்களில் அமைந்த தேவாரப் பதிகங்களை 31 கட்டளைகளில் (இராகங்களில்) பாடிக்கொள்ளவேண்டும். இவற்றில் எட்டுப் பண்கள்போக மற்றைய இருபத்து மூன்று (23) பண்களும் (இராகங்களும்) ஞானசம்பந்தருக்குக் கூறியதேயாகும். சம்பந்தருக்கும், அப்பருக்கும் வாராததாக எட்டுப் பண்களே புதிதாக இதில் காணப்படுகின்றன. அப்பர் சுவாமிகளுக்கு சம்பந்தர்—சுந்தரர் இவர்களுக்கு இல்லாதனவாக நேரிசை—விருத்தம்—

குறுந்தொகை—தாண்டகம் என்ற நான்கு கட்டளைகள் உள்ளன, இவைகள் செய்யுள் வகைகள் என்பர். நம் தமிழ் நாட்டின் கண் தமிழை இயல் இசை நாடகம் என்று முத்தமிழாக வளர்த்து ஒவ்வொன்றின் இலக்கணத்தையும் ஒன்ரோடு ஒன்று சேர்த்து ஒன்ருக்கி அனுபவித்து வந்தனர். இவ்வாறு கலைகளை நுட்ப மாய்ப் புகுத்தியவர்களான நமது முன்னோர் இயல் வகைகளைக் கூறும்போது அவைகளுக்கு இசைப் பண்ணையும் பொருத்தினர். ஆகவே இன்னின்ன செய்யுட்பாக்களுக்கு இன்னின்ன இசையே யாகும், அதிலேயே பாக்களைச் சொல்லல் வேண்டுமென்ற நியதியை உண்டாக்கினர். இவ்விதம் கலைகளை மேம்பாடடையச் செய்தனர். தென்னுடாகிய தமிழ்நாட்டைத் தவிர வேறெந்த நாட்டிலும் இது கையாளப்படவில்லை. ஆகவே நேரிசை, விருத்தம், குறுந்தொகை, தாண்டகம் இவைகள் விருத்தப் பாக்களாயினும் இப்பாக்களையும் கட்டளை வகையாற் சிறப்பித்தனர். இதிற் சந்தேகிப்பதற்கிடமில்லை. சுந்தரருக்கு சம்பந்தர் — அப்பர் இவர்களுக்கு இல்லாததாகத் தக்கேசியில் அதிகமாக நான்கு (4) கட்டளைகளும், புற நீர்மையில் அதிகமாக ஒரு கட்டளையும், பழம் பஞ்சுரத்தில் இரண்டு கட்டளைகளும், செந்துருத்தியில் ஒரு கட்டளையும் ஆக எட்டு (8) கட்டளைகள் (இராகங்கள்) இவருக்கே உரியவாக இருக்கின்றன. ஆகவே 66 + 4 + 8 = 78. இந்த எழுபத்தெட்டுக் கட்டளைகள் அல்லது பண்கள் அல்லது இராகங்களே உண்டென்று அறியப்படுகின்றன. எழுபத்தெட்டும் (78) எழுபத்தெட்டு (78) வகைகளான பேதங்களுடையதும், ரஸங்களுடையதும், பாவ ரூபங்களுடையதுமாம் என்று அறியப்படும். மற்றைய நாற்பத்திரண்டும் (42) ஒவ்வொருவருக்கும் உள்ளவையேயாகின்றன. இவற்றையும் சேர்த்தால் 120 என்ற கூட்டுத்தொகை கிடைப்பதாகும்.

இக்கட்டளை வகைகளையும் பண் வகைகளையும் எளிதாக அறிய உதவுமாறு ஓர் பட்டியல் ஒன்று அடுத்த பக்கத்தில் குறிப்பிடப்பெற்றிருக்கின்றது. அவற்றில் சம்பந்தர்—அப்பர்—சுந்தரர் இவர்களுக்கு உரிய பண்களும், கட்டளைகளும் தனித் தனியாக அறியுமாறு குறிக்கப்பெற்றுள்ளன. யார் யாருக்கு அதிகப் பண்கள் உள்ளன யார் யாருக்கு அதிகக் கட்டளைகள் உள்ளன என்பதைத் தெளிவாகக் கண்டுகொள்ள அது உதவும் நிலையில் குறிக்கப்பெற்றுள்ளது. அப்பண்களைத் தற்காலம் என்னென்ன இராகங்களில் பாடி வருகின்றனர் என்றும் எடுத்து விளக்கியுள்ளோம். அங்கு விளக்கியுள்ளது ஏட்டுச் சுவடிகளிலும், பரம்பரை வழியில் ஓதுவா மூர்த்திகள் பாடி வருவதுமாகும்.

எண்	பண்ணின் பெயர்	சம்பந்தர் கட்டளை	அப்பர் கட்டளை	சுந்தரர் கட்டளை	தற்காலத்திற் பாடப் படும் இராகங்கள்
1	நட்டபாடை	8	1	2	நாட்டை
2	தக்கராகம்	7	1	2	காம்போதி
3	பழந்தக்கராகம்	3	1		ஆரபி
4	தக்கேசி	2	1	6	காம்போதி
5	குறிஞ்சி	5	1	2	அரிகாம்போதி
6	வியாழக்குறிஞ்சி	6	1		சௌராஷ்டிரம்
7	மேகராகக்குறிஞ்சி	2	1		நீலாம்புரி
8	இந்தளம்	4	1	2	நாதநாமக்ரியா
9	சீகாமரம்	2	1	1	நாதநாமக்ரியா
10	காந்தாரம்	3	1	2	நவரோசு
11	நட்டராகம்	2	1	2	பந்துவராளி
12	செவ்வழி	1	1		யதுகுலகாம்போதி
13	காந்தாரபஞ்சமம்	3	1	1	கேதாரகௌளை
14	கொல்லி	4	1	3	நவரோசு
15	கௌசிகம்	2	1	2	பைரவி
16	பஞ்சமம்	1	1	1	ஆகிரி
17	சாதாரி	9	1		பந்துவராளி
18	புறநீர்மை (நேர்திறம்)	1	1	2	பௌளி
19	அந்தாளிக்குறிஞ்சி	1	1		சாமா
20	பழம்பஞ்சுரம்			2	சங்கராபரணம்
21	செந்துருத்தி			1	மத்தியமாவதி
22	நேரிசை		2		நவரோசு
23	குறுந்தொகை		1		நாதநாமக்ரியா
24	திருத்தாண்டகம்		1		அரிகாம்போதி

பண்கள் 24-க்கு 66 + 23 + 31 = கட்டளைகள் 120.

மேலேகண்ட குறிப்பில் தக்கராகம்-தக்கேசி இவ்விரண்டுபண்ணும் காம்போதி இராகத்திலும், இந்தளம்—சீகாமரம்—குறுந்தொகை இம் மூன்றும் நாதநாமக்ரியாவிலும், நட்டராகம்-சாதாரி இவ்விரண்டும் பந்துவராளியிலும், குறிஞ்சி—திருத்தாண்டகம் இவ்விரண்டும் அரி காம்போதியிலும், காந்தாரம்—கொல்லி—நேரிசை இம்மூன்றும் நவ ரோசிலும் பாடப்படுகின்றன. அனால் இப்பண்களின் பெயர்—நிலை யாழ்—திறம்-இவைகளெல்லாம் வெவ்வேருகும். இவ்வாறிருக்க ஒரே இராகத்தில் பாடப்படுவது சிறந்ததல்ல. இவைகளெல்லாம் இக்கட் டளை பேதங்களில் தெளிவுபடுவனவாகும்.

திருவைகாவூர்ச் சிவன்கோயில் கல்வெட்டு வரலாறு.

வித்துவான், வை. சுந்தரேச வாண்டையார்,
ஆராய்ச்சியாளர்,
அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

திருவைகாவூர் என்பது, தஞ்சாவூர்ச் சில்லாவில் பாபநாசந் தாலுகாவில், கொள்ளிடப் பேராற்றின் தென்கரையிலுள்ள தேவாரம் பெற்ற தலமாகும். இவ்வூர்ச் சிவன் கோயிலில் பல்லவ மன்னரில் நந்திவர்ம மகாராஜர் காலத்திலும், சோழ மன்னர்களில் முதற் குலோத்துங்கன், இரண்டாங் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன், மூன்ருங் குலோத்துங்கன், மூன்ரும் இராசேந்திரன் இவர்கள் காலங்களிலும், விசயநகர வேந்தரில் வீரப்பிரதாப தேவராயர் காலத்திலும், பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

சிவன்கோயில் கட்டப்பெற்ற காலம்.

முன் செங்கல்லால் கட்டப்பெற்றிருந்த இக்கோயில், நம் சோழ மண்டலத்தைக் கி. பி. 1070 முதல் கி. பி. 1120 முடிய ஆண்ட முதற் குலோத்துங்க சோழ மன்னனது முப்பத்திரண்டாம் ஆட்சியாண்டில் இடிந்த நிலையில் இருந்தது. அதுபொழுது இராசராச வளநாட்டுப் பரவைச் சுற்றுப் பூண்டியிலிருந்த பவழக் குன்றனுரான வெண்ணுடையார், இதை அச் சோழ மன்னனிடம் விண்ணப்பித்துக் கோயிலின் கர்ப்ப இல் (The central shrine) மண்டபம் இவைகளைக் கருங்கல்லால் கட்டியுள்ளார். இச்செய்தியை இம் முதற் குலோத்துங்க சோழனது நாற்பதாம் ஆண்டுக் கல்வெட்டு அறிவிக்கின்றது. ஆதலால் இக்கோயில் (1070+32) = கி. பி. 1102இல் கட்டத் தொடங்கி, கி. பி. 1110-க்கு முன் முடிவுபெற்றுள்ளது என்பது உறுதி. எனவே இக்கோயில் கட்டப்பெற்று இற்றைக்கு 847 ஆண்டுகள் ஆகின்றன. முதற் குலோத்துங்க சோழ மன்னன் காலத்துக் கோயிலமைப்பை ஆராயப் புகுவார்க்கு இக்கோயில் பெரிதும் பயன்படும்.

---

* See the Annual Report on South Indian Epigraphy for the year 1914 Nos. 48—60 and the S. I. I. Vol. 12. The Pallavas. No. 58.

இறைவரின் திருப்பெயர்.

இக்கோயில் கல்வெட்டுக்களில் இறைவர் திருவைகாவுடைய மகாதேவர், திருவைகாவுடையார் என்னும் பெயர்களால் குறிக்கப்பெற்றுள்ளனர்.

சில திருமேனிகளின் பெயர்கள்.

இக்கோயில் கல்வெட்டுக்களில் திருமாளிகைப் பிள்ளையார், நித்தவிநோத கல்யாணசுந்தரர், வில்லவன் பெருமாள் (திருமேனி) இவர்களைப்பற்றிய குறிப்புக்கள் உள்ளன. இவர்களுள் திருமாளிகைப் பிள்ளையாரும், நித்தவிநோத கல்யாண சுந்தரரும் இரண்டாம் இராசராச சோழதேவர் கல்வெட்டிலும், வில்லவன் பெருமாள் மூன்றும் இராசேந்திர சோழதேவர் கல்வெட்டிலும் குறிக்கப்பெற்றுள்ளனர்.

திருக்குகை.

இவ்வூரில் மூன்றுங் குலோத்துங்க சோழன் காலத்தில் திருமுடியால் நாடாண்டான் குகை என்னும் பெயருள்ள திருமடம் ஒன்று இருந்தது. அக்காலம் அதன் தலைவராய் விளங்கியிருந்தவர் நானூந்தூர் உடையார் புகலி வேந்தர் ஆவர்.

இவ்வூரைத் தன்னகத்துக் கொண்டுள்ள நாடு.

இவ்வூர் முதற் குலோத்துங்க சோழன் காலத்தில், உலகுய்யவந்த சோழ வளநாட்டு அண்டாட்டுக் கூற்றத்துத் திருவைகாவூர் என்றும், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன், மூன்றுங் குலோத்துங்கன் இவர்கள் காலங்களில் விக்கிரம சோழ வளநாட்டு இன்னம்பர் நாட்டுத் திருவைகாவூர் என்றும் இக்கோயில் கல்வெட்டுக்களில் குறிக்கப்பெற்றுள்ளது.

சில குறிப்புக்கள்.

அண்டாட்டுக் கூற்றம், இன்னம்பர் நாடு, இவைகள் இராசேந்திரசிங்க வளநாட்டின் 22 பிரிவுகளில் அடங்கியுள்ள இரு பிரிவுகளாகும். இவைகளுள் கவியாத் தலையாகிய பண்டித சோழ சதுர்வேதிமங்கலம், சத்திமங்கலம், தோரூர், திருப்புறம்பியம் முதலான ஊர்கள் அண்டாட்டுக் கூற்றத்தில் உட்பட்டிருந்தன என்றும், ஆதனூர், அசுக்கூர், ஏராகிய மும்முடி சோழமங்கலம், கொட்டையூர், பெரிய வானவன்மாதேவி, சதுர்வேதிமங்கலம், பராந்தக சதுர்வேதிமங்கலம், கருப்பூர், மருத்து

வக்குடி முதலான ஊர்கள் இன்னம்பர் நாட்டில் உட்பட்டிருந்தன என்றும் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

பண்டைய வழக்கம்.

இக்கோயிலில் நந்திவர்மராஜரின் இராச்சிய ஆண்டு இருபத்திரண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டு ஒன்று இருக்கின்றது. இது திருவைகாவுடைய மகாதேவர்க்கு நுந்தாவிளக்கு, அமுது படி இவைகளுக்காகச் சந்திப்பெலியார், திரிபுவன மாதேவிச் சதுர்ப்பேதிமங்கலத்துச் சபையாரிடமிருந்து வண்ணக்கவிளாகம் நிலம் ஒன்றரையை (ஒன்றரை வேலியை)ப் பொன் கொடுத்து வாங்கிக்கொடுத்ததை உணர்த்துகின்றது. இந்த நந்திவர்மராஜரே, பல்லவர் வரலாற்றில் மூன்றும் நந்திவர்மர் என்று பேசப்பெறுபவர் ஆவர். இவருடைய கல்வெட்டின் முடிவில் "இது கல்வெட்டுப்படி" எனச் செதுக்கப்பட்டுள்ளது. இதனால் பழுதுற்ற கோயிலை இடித்துவிட்டுப் புதிதாகக் கட்டிமுடித்த கோயிலில், அக்கோயிலை இடிப்பதற்கு முன்புள்ள கல்வெட்டைப் பிரதி செய்துகொண்டு, பின் புதிதாகக் கட்டிய கோயிலில் அக்கல்வெட்டைச் செதுக்குவது பண்டைய வழக்கமாகும் என்பது தெரியவருகிறது. இவ்வழக்கம் "ஸ்வஸ்திஸ்ரீ இதுவுமொரு பழங்கற்படி. யாண்டு நந்திப்போத்தரையற்கு பத்தொன்பதாவது திருக்கோடிகாவில் சிறுநங்கை ஈஸ்வரத்து மகாதேவர்க்கு........" எனத் தொடங்கும் கல்வெட்டாலும், உறுதி எய்துகின்றது. (South Indian Inscriptions Vol. 12. The Pallavas.)

நினைவில் வைக்கவேண்டியதொரு செய்தி.

இக்கோயில் கட்டப்பெற்ற காலம் பரகேசரிவர்மராகிய திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவரின் நாற்பதாம் ஆட்சியாண்டு எனக் கல்வெட்டில் குறிக்கப்பெற்றிருப்பதால் பரகேசரி என்ற பட்டத்துடன் (கி. பி. 1178—1218) ஆண்ட மூன்றுங் குலோத்துங்க சோழனின் கடைசி ஆட்சியாண்டில் இக்கோயில் கட்டப்பெற்றது என்று கொள்ளுதல் கூடாதா எனின், மூன்றுங் குலோத்துங்க சோழனுக்கு முற்பட்டு ஆண்ட இரண்டாம் குலோத்துங்கன் இரண்டாம் இராசராசன் இவர்களின் கல்வெட்டுக்கள் இக்கோயிலில் இருக்கின்றனவாதலின் அவ்விதம் கொள்வதற்கு இல்லை. முதல் குலோத்துங்கன் இராசகேசரி என்ற பட்டம் உடையவன். அவன் பரகேசரி என்று இங்கே கல்வெட்டில் செதுக்கப்பட்டிருப்பது கல் தச்சனால் நேர்ந்த பிழையாகும்.

மக்களுக்காக வாழ்ந்த மன்னர்கள்.

(பதிப்புரிமை ஆசிரியருக்கே)

சாமி. சிதம்பரனுர்.

உயிரினும் ஒழுக்கம் சிறந்தது:

உள்ளத்திலே தூய்மையுள்ளவர்கள் ஒருபொழுதும் தீங்கு செய்யத் துணியமாட்டார்கள். உள்ளப்போக்குத்தான் நன்மைக்கும் தீமைக்கும் நடைபாதை. மனம் மாசற்றதாக இருந்தால் செயலும் சிறந்ததாக இருக்கும். உள்ளத்திலே அழுக்குப் படிந்திருந்தால் செயலும் பொல்லாமையை நோக்கித்தான் போகும். மக்களுடைய வாழ்க்கையை நடத்திவைப்பது உள்ளந்தான். 'மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்து அறன்' என்ற பொய்யாமொழி என்றும் பொய்யாமொழியே யாகும்.

'ஒருவனுடைய தனிப்பட்ட வாழ்க்கையைப்பற்றிக் கணக்கில் எடுத்துக்கொள்ளக்கூடாது; பொது வாழ்க்கையைப் பற்றித்தான் பேசவேண்டும். தனிப்பட்ட வாழ்க்கை வேறு; பொது வாழ்க்கை வேறு' என்று கூறுவோர் சிலர் உண்டு. இது உண்மைக்கு மாறுனது; பெரிய மனிதர்களின் குற்றங்களை மறைப்பதற்காகப் போடும் திரைச் சீலைகளில் ஒன்று. ஒருவருடைய தனிப்பட்ட தன்மையும், நடத்தையும் பொது வாழ்விலே தலைநீட்டாமல் அடங்கிவிடமாட்டா. ஆகையால்தான் உயிரினும் ஒழுக்கம் உயர்ந்தது; சிறந்தது; என்று உரைத்தனர். ஒழுக்கம் உள்ளவர்களையே உயர்ந்த மக்களாகக் கருதினர். அறிவுள்ளவர்கள் ஒழுக்கத்தை உறுதியாகப் பின்பற்றவேண்டும் என்று முன்னோர்கள் மொழிந்தனர்.

பண்டைத் தமிழகத்தில் மக்கள் நன்மைக்காகவே வாழ்ந்த மன்னர்கள் பலர் இருந்தனர். அவர்கள் அனைவரும் தனிப்பட்ட வாழ்விலும் உயர்ந்த பண்பு படைத்தவர்கள்; சிறந்த நடத்தையுள்ளவர்கள்; அறிவும், ஆற்றலும் அமைந்தவர்கள். இத்தகைய இயல்புள்ள மன்னர்களே மக்களால் மதித்துப் பாராட்டப்பட்டனர்., 'இறைவன்' என்று எண்ணி எல்லா மக்களாலும் போற்றப்பட்டனர்,

அவர்கள் ஒழுக்கமே உயிர் எனக்கொண்டு வாழ்ந்தனர்; ஆதலால் தந்நலத்திற்கு அடிமைப்படவில்லை. தாங்கள் என்ன

நினைத்தாலும், எதைச் செய்தாலும், அதைத்தடுக்க யாரும் இல்லாத தனிச் செல்வாக்கிருந்தும் அவர்கள் தவறு செய்யத் துணியவில்லை. நேர்மையான வழியிலே நிலையாக நின்று தங்கள் கடமைகளைப் புரிந்தனர். இவ்வுண்மையைப் பதிற்றுப்பத்துப் பாட்டு ஒன்றிலே காணலாம்.

மன்னர்களின் ஒழுக்கம் :

"முன்கோபம் பொல்லாதது. ஆகும் செயல்களையெல்லாம் அடியோடு தகர்த்துவிடும். சிந்திப்பதற்குச் சிறிதும் இடந்தராது.

'கண்ட பொருள்களின்மேல் எல்லாம் ஆசை வைப்பது அழிவுக்கே இடமாகும். காமுற்ற பொருளைக் கவர்தற்கு நேர்மையற்ற வழியில் செல்லத் தூண்டுவதாகும்; அது அறநெறியைத் தாண்டி அப்பாற் சென்று மறம் புரிவதற்கு அடிப்படையாகி விடும்.

'அளவுகடந்த தாட்சணியம் நீதி முறையைக்கூட நிலை குலைத்துவிடும். நடுவு நிலையிலே உறுதியாக நடப்பதற்கு முட்டுக்கட்டையாக நிற்பவைகளில் கழி கண்ணோட்டந்தான் முதல் தடை.

'அச்சம் உள்ளவர்களால் எச்செயலையும் வெற்றியுடன் செய்துமுடிக்க இயலாது. அவர்கள் பகைவர்களால் எளிதிலே அழிக்கப்படுவார்கள்; அடக்கப்படுவார்கள்.

'பொய்ச்சொல் நன்மைகளை அழித்துவிடும்; நண்பர்களைப் பக்கத்தில் நெருங்கவொட்டாமல் விரட்டியடிக்கும்; பகைவர்களைப் பெருக்கிவிடும். பழிபாவச் செயல்களுக்கு விதையாக நிற்பது வேண்டாத—வீணான பொய்யுரைகளே தாம்.

'பொருளிலே அளவுகடந்த அன்புவைத்தல் தவறு; அளவு கடந்தே பேராசை அல்லலுக்கு ஊற்று. பேராசை பிடித்தவர் தம் ஆசையை நிறைவேற்றிக்கொள்ள இன்னது இனியது என்று எண்ணிப் பார்க்காமல் எதையும் துணிந்து செய்வார்கள்.

'செல்வத்தையும், செல்வத்தைச் சேகரிப்பதற்குரிய துறைகளையும் அழித்துவிடுதல் கூடாது. அழித்துவிட்டால் அதனால் நாட்டுக்கே பெருந்தீங்கு நேரும்.

'யாரிடத்திலும் கடுமை காட்டக்கூடாது; பகைவர்களும் பாராட்டும்படி நடந்துகொள்ளவேண்டும். தன்கீழ் வாழ்வோர்

அறியாமல் குற்றம் புரிந்தால் அவர்களை அச்சுறுத்துவதோடு அமையவேண்டும். அவர்கள்மேல் இரக்கங்காட்டி அவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்தவேண்டும்.

ஆதலால், சினன், காமம், மிகுந்த கண்ணோட்டம், அச்சம் பொய்ச்சொல், பொருளில் மிகுந்த ஆசை, அழித்தல், கடுமை ஆகிய இவைகளும் இவைபோன்ற குற்றங்களும் கூடா ஒழுக்கம்; அறநெறியிலே நடத்தும் ஆட்சிக்கு முட்டுக்கட்டையாகும் என்று உணர்ந்திருந்தனர்.

ஆகையால் தீமைகளையெல்லாம் வெறுத்துச் சேய்மையிலே விரட்டினார்கள்; நன்மையான செயல்களையே எப்பொழுதும் நாடிச்செய்து நலம்பெற்றனர். கடலிலிருந்தும், காடுகளிலிருந்தும் வாழ்க்கைக்கு வேண்டிய பல செல்வங்களையும் முயன்று பெற்று வாழ்ந்தனர்.

மற்றவர்களை—அமைதியுடன் வாழ்கின்ற பொது மக்களைத்—துன்புறுத்தமாட்டார்கள். தமது முயற்சியால் பெறுவதைத் தவிர முயற்சியற்ற வேறு முறையிலே பொருளைக் கொள்ளை கொள்ளமாட்டார்கள்.

குற்றமற்ற சிறந்த அறிவினர்களைத் துணையாகக்கொண்டிருப்பர். அவர்கள் ஆராய்ந்துரைக்கும் சிறந்த நெறியிலே தவறாமல் நடந்து நலம்புரிவார்கள்.

தம்மை விரும்பும் சுற்றத்தாரோடு இருந்து, உள்ளதை அவர்களுக்கும் பகுத்துக்கொடுத்துத் தாமும் உண்பார்கள்.

தமது நாட்டு மக்கள் எல்லாம் நீண்டநாள் நோயின்றி உயிர் வாழ்ந்து இன்புறும்படி நெடுங்காலம் அரசாண்டு வந்தனர். இத்தகைய சிறந்த அறிஞர் குடியிலே பிறந்தவன் நீ.

சினனே, காமம், கழிகண்ணோட்டம்
அச்சம், பொய்ச்சொல் அன்பு மிகஉடைமை
தெறல், கடுமையொடு பிறவும் இவ்வுலகத்து
அறம்தெரி திகிரிக்கு வழிஅடை யாகும்
தீது சேண் இகந்து, நன்றுமிகப் புரிந்து;
கடலும், கானமும், பலபயம் உதவப்;
பிறர் பிறர் நலியாது, வேற்றுப்பொருள் வெஃகாது;
மையில் அறிவினர் செவ்விதின் நடந்து; தம்
அமர் துணைப் பிரியாது பாத்து உண்டு; மாக்கள்
மூத்த யாக்கையொடு பிணியின்று கழிய
ஊழிஉய்த்த உரவோர் உம்பல்!" (பதிற்று. பா. 22)

இவ்வாறு பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப்பற்றிப் பாலைக் கௌதமனார் என்னும் புலவர் பாடியுள்ளார். இச்செய்யுள் அச்சேர மன்னனும் அவன் முன்னோர்களும் தனிப்பட்ட முறையிலும், பொது வாழ்க்கையிலும் ஒரேவிதமான ஒழுக்க நெறியைப் பின்பற்றி வந்தனர் என்பதையே வலியுறுத்தும்.

யானைக் கண்சேய் மாந்தரம்சேரல் இரும்பொறை என்னும் சேரனைப்பற்றிய பாட்டு ஒன்றும், நல்ல மன்னர்களின் நடுநிலையைப்பற்றி எடுத்துரைக்கின்றது. குறுங்கோழியூர் கிழார் என்னும் புலவர் அவனைப்பற்றிப் பாடும்போது அவனுடைய சிறந்த குலப் பெருமையைப் பாராட்டிக் கூறியிருக்கின்றார்.

"கொடுமையைக் கடிந்து விரட்டியவர்கள்; நல்ல முறையிலே ஆட்சி நடத்தியவர்கள்; குடிமக்கள் தாமே மகிழ்ந்து கொடுக்கும் ஆறிலொரு கடமையைப்பெற்று உண்டவர்கள்; நடுநிலைமை தவறாமல் ஆட்சிபுரிந்தவர்கள்; எத்தகைய தடையும் இல்லாமல் இந்நில முழுதும் தமது ஆணை செல்லும்படி அரசாட்சி செய்தவர்கள்; ஆகிய இத்தகைய சிறந்த மன்னர்களின் குடிப்பெருமையைக் காத்தவனே.

கொடிது கடிந்து, கோல்திருத்திப்,
படுவது உண்டு, பகல் ஆற்றி,
இனிது உருண்ட சுடர்நேமி
முழுது ஆண்டோர் வழிகாவல! (புறநா. பா. 17)

இப்பாடலும் பண்டைத் தமிழ் மன்னர்களின் மனப்பான்மையை விளக்கிக் காட்டுகின்றது.

சோழன் நெய்தலம்கானல் இளஞ்சேட் சென்னி என்பவன் ஒரு சோழ மன்னன். அவனுடைய சிறந்த பண்பை ஊன்பொதி பசுங்குடையார் என்னும் புலவர் பாராட்டிப் பாடியிருக்கின்றார். அவ்வேந்தனுடைய ஆற்றலையும் அறிவையும் பற்றி அப்பாடலிலே காணலாம்.

"உனக்கு அடங்கி—உன்னை வணங்கி வாழ்வோரை எல்லாம் நீ நன்றாக அறிந்திருக்கின்றாய். எப்பொழுதும் பிறர்மீது குறை கூறுவதையே குணமாகக் கொண்டவர்கள் சிலர் உண்டு. அத்தகையவர்கள் சொல்லும் மொழிகளையெல்லாம் உண்மையென்று கண்மூடித்தனமாக நம்பிவிடமாட்டாய். குற்றம் சாற்றப்பட்டவர்கள்மேல் குற்றம் உண்டா என்பதை நீயே நன்றாக ஆராய்ந்து தெளிவாகத் தெரிந்துகொள்ளுவாய். ஒருவன் உண்மையிலேயே குற்றவாளியாக—கொடுமை செய்தவனாக இருந்ததைக் கண்டால், நீதி நூல்களை ஆராய்ந்து அவன் செய்த

குற்றத்திற்கேற்ற தண்டனை விதிப்பாய்; உனக்குக் கொடுமை செய்தவர்கள், தாமே தம் குற்றத்தை உணர்ந்து உன்னிடம் வந்து தஞ்சம் அடைந்தவர்களானால் அவர்களை நீ தண்டிக்க மாட்டாய். அவர்கள் குற்றம் புரியாத காலத்தில், அவர்களிடம் எத்தகைய அன்பு கொண்டிருந்தாயோ, அதைக்காட்டிலும் மிகுந்த இரக்கங்காட்டி அவர்களை மன்னிப்பாய்.

வழிபடு வோரை வல்அறி தீயே,
பிறர்பழி கூறுவோர் மொழிதேறலையே!
நீமெய் கண்ட தீமைகாணின்,
ஒப்ப நாடி. அத்தகவு ஒறுத்தி,
வந்துஅடி பொருந்தி முந்தை நிற்பின்,
தண்டமும் தணிதிநீ பண்டையின் பெரிதே".

(புறநா. பா. 10)

இச்செய்யுள் மன்னனுடைய சிறந்த அறிவை விளக்கிற்று; நீதிமுறைசெய்யும் திறனைக் காட்டிற்று. பகைவர்க்கும் மன்னிப் பருளும் சிறந்த பண்பையும் குறித்தது.

பத்துப் பாட்டிலே உள்ள பெரும்பாணாற்றுப்படை என்பது இளந்திரையன் என்னும் தொண்டை வேந்தன்மேல் பாடப் பட்டது. அவன் காஞ்சியிலிருந்து தொண்டமண்டலத்தை ஆண்ட மன்னன். அவன்மீது பெரும்பாண் ஆற்றுப்படையைப் பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் புலவர். அவர் அவ்வேந்தன் பண்பைப்பற்றிக் கூறியிருப்பது குறிப்பிடத் தக்கது.

"மறம் வளர—அதர்மம் தலையெடுக்கப் பார்த்துக்கொண்டி ருக்கமாட்டான். அறமற்றதை முளையிலேயே கிள்ளியெறிந்து விடுவான். அறத்திற்கே என்றும் துணையாக நிற்பான். அறம் புரிவதற்கே அவனது செங்கோல் என்றும் உதவிசெய்யும். இத்தகைய சிறந்த பண்புள்ள கூர்மையான வேற்படையை உடைய திரையன்.

அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்
பல்வேல் திரையன். (பத்து. பெரும். வ. 36–37)

இவ்வாறு திரையன் பண்பைக் கூறிய புலவர் மேலும் அவனு டைய பெருமையைப் பாராட்டுகின்றார்.

"நீதி முறைகளை வேண்டி வந்தோர் யாராயினும், தங்கள் குறையைத் தீர்த்துக்கொள்ள விரும்பி வந்தோர் யாராயினும், அவர்களை வரவேற்பான்; இன்சொற் கூறுவான்; அவர்கள்

வேண்டுகின்றவைகளை வேண்டியபடியே கொடுப்பான்; நடுநிலையிலேயிருந்து உண்மையைக் கண்டறியும் குற்றமற்ற நுண்ணறிவு படைத்தவன். வறியோர்க்கும் புலவர்களுக்கும் செல்வத்தை வாரி வழங்குகின்றவன். அவன் ஒருபொழுதும் சோர்வடையமாட்டான்; எப்பொழுதும் ஊக்கத்துடன் இருக்கும் உள்ளம் படைத்தவன். அவனைச்சுற்றிக் கொடுமை செய்யாத நல்ல அமைச்சர்கள் இருப்பார்கள்; சான்றோர்கள்; நண்பர்கள், உறவினர்கள் இருப்பார்கள்.

முறைவேண்டுநர்க்கும், குறைவேண்டுநர்க்கும்,
வேண்டுப வேண்டுப வேண்டினர்க்கு அருளி,
இடைதெரிந்து உணரும் இருள்தீர் காட்சிக்
கொடைக்கடன் இறுத்த கூம்பா உள்ளத்து
உரும்புஇல் சுற்றமொடு இருந்தோன்.

பத்து. பெரும். வ. 443—447)

மேலே காட்டியவைகளைக்கொண்டு பண்டைக்காலத் தமிழ் மன்னர்களின் பண்பைக் காணலாம். சிறந்த அறிவும், உயர்ந்த ஒழுக்கமும், ஆழ்ந்த சிந்தனையும் உள்ள வேந்தர்களே, மக்கள் போற்றும் மன்னர்களாக வாழ்ந்தனர்; மக்களுக்கு நலம்புரியும் மன்னர்களாக—இருந்தனர்; அவர்களுடைய தனிப்பட்ட பண்பும், ஒழுக்கமும், அறிவுமே அவர்களைச் செங்கோல் வேந்தர்களாகச் சிறந்து வாழும்படி செய்தது. இவ்வுண்மையைப் பதிற்றுப் பத்து, புறநானூறு, பத்துப்பாட்டு ஆகிய நூல்களிலே கண்டோம்.

தந்நலமற்ற மன்னர்கள் :

பழந்தமிழ் வேந்தர்களிலே பலர், குடிகளைப் புரப்பதே தம் கடன் என்று கருதியிருந்தனர். குடிகள் நன்மையின் பொருட்டு எதையும் செய்யத் துணிந்து நின்றனர். இதற்கான சான்றுகள் பல உண்டு, அவற்றுள் தலைசிறந்து நிற்கும் புறநானூற்றுப் பாடல் ஒன்றுண்டு. அப்பாடல் **தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன்** என்னும் பாண்டிய மன்னனாலேயே பாடப்பட்டது. பண்டைத் தமிழ் வேந்தர்களின் ஆட்சிப் பெருமைக்கு அப்பாடல் ஒரு தூண்டா விளக்காகத் துலங்குகின்றது.

(தொடரும்)



படப்பிடிப்பு—வியாஸ், தஞ்சை.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் முதல் இராசேந்திரன் செப்பேடுகளில் ஒரு பக்கம்.